24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 133 | பங்குனி 26ஆம் நாள் | செவ்வாய்க்கிழமை | 09 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


# சர்வாதிகார ஆட்சிக்கு இனிமேல் இடமில்லை

## மகிந்த அணியை மறைமுகமாகத் தாக்கிய மைத்திரி



கொழும்பு, ஏப்ரல் 9

இலங்கையில் மீண்டும் சர்வாதிகார ஆட்சிக்கு இங்குள்ள மக்கள் இனி மேல் இடமளிக்க மாட்டார்கள். நாமும் அதற்கு இடமளிக்க மாட்டோம். அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் இது வரை எந்தக் கட்சியும் முடிவெடுக்க வில்லை. இந்த விடயத்தில் நாம் அவசரப்பட்டு முடிவு எடுக்கக்கூடாது. >> 19



## இரணைமடுக் குள விவகாரம் அறிக்கை ஆளுநரின் கையில்

யாழ்ப்பாணம், ஏப்.9

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள இடருக்கு இரணைமடு குளம் திட்டமிடப்படாது திறந்து விடப்பட்டமை காரணமா என்பது தொடர்பில் விசாரிப்பதற்கு ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது விசாரணை அறிக்கையை வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்றுக் கையளித்துள்ளது.

விசாரணைக் குழுவின் தலைவர் பொறியியலாளர் ரகுநாதன், ஆளுநர் சுரேன் இராகவனி >> 19

## நீதிமன்றில் இருந்து பாய்ந்து தப்பிச் சென்ற சந்தேகநபர்

*யாழ். நீதிமன்றில் நேற்றுச் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்காக அழைத்து வரப்பட்ட சந்தேகநபர் ஒருவர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் கீழ் தளத்தின் ஊடாகப் பாய்ந்து நீதிமன்றப் பின் வாயிலால் ஓடித் தப்பினார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் நடந்துள்ளது. யாழ்ப்பாணம் கொட்டடி முத்தமிழ் வீதியைச் சேர்ந்த ப.விஜிகாந்த என்ற சந்தேகநபரே இவ்வாறு தப்பியோடியுள்ளார்.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பா >> 19

## கோத்தபாயவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குகள்

### மகிந்த அணி கொதிப்பு

கொழும்பு, ஏப்.9

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் தொடர்பாக அவருக்கு எழுத்து மூல அறிவிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

முதலாவது வழக்கை இலங்கையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அசிம்சா விக்கி >> 19



## அவசர அவசரமாக நாடு திரும்புகிறார் கோத்தா!

கொழும்பு, ஏப்.9

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச எதிர் வரும் வெள்ளிக்கிழமை நாடு திரும்பவுள்ளார். கலிபோர்னியாவில் நடைபெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்பதற்காக கடந்த வாரம் அமெரிக்கா சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ச, அங்கு வாழும் இலங்கை மக்களையும் சந்தித்து சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும் கலந்துரையாடி >> 19

## ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஏப்.9

ஹெரோய்ன் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு, கைவேலியில் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 31வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து 2 கிராம் 530 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலி >> 19

## ஏமாற்றி சங்கிலி பறித்தவரை பிடித்துக் கொடுத்த மூதாட்டி

சாவகச்சேரி, ஏப்.9

கடந்த வாரம் ஏமாற்றித் தன்னிடம் தங்கச் சங்கிலியை அபகரித்த நபரை நேற்றுப் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்துள்ளார் மூதாட்டி ஒருவர்.

கடந்த பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்காக அச்சுவேலியிலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவிலுக்குச் சென்றுள்ளார். அப்போது அவரை உடனடியாக அறிவித்தல் பந்தலுக்கு வருமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. அவர் அங்கு சென்றபோது, அங்கு நின்ற ஒருவர் மூதாட்டியின் மகன் விபத்தில் சிக்கி காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு >> 19

## முல்லையில் பெண் கொலை; கணவரைத் தேடி வலை வீச்சு

முல்லைத்தீவு, ஏப்.9

பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவருடைய கணவனைத் தேடிப் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். நேற்றுமாலை வரை அவரைக் கைது செய்ய முடியவில்லை என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு மூங்கி >> 19

## தரம் 5 புலமைப் பரிசில் இனிக் கட்டாயமில்லை

### கொழும்பு கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப்.9


தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்காலத்தில் கட்டாயம் இல்லை என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குவதற்காகவும், தேசிய பாடசாலைகளில் தரம் 6 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கா >> 19


Dialog
டியூன் Data
இலங்கையில் அதிக நன்மைகளை கொண்ட
இன்டர்நெட் கார்ட் மற்றும் ரீலோட்
ரு.49/- 750MB
ரு.99/- 1.5GB
50% 4G Bonus உள்ளடங்களாக
*Anytime + Night Time + Anytime Bonus Data on 4G
Dialog
எதிர்காலம் இன்றே.

# முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய 15 வாஸ்து விதிகள்




வாஸ்து சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றனர். அவ்வாறான சில வாஸ்து விதிகளைப்பற்றிப் பார்ப்போம். நல்ல காற்று வசதியும் சூரிய வெளிச்சமும் இருக்குமாறு வீடு கட்ட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட அலைவரிசையில் நம் தொலைக்காட்சியில் ஒரு குறிப்பிட்ட சேனல் டியூன் ஆவது போல், ஒரு குறிப்பிட்ட கட்டட வடிவமைப்பில் (building design) ஒரு கட்டடத்தைக் கட்டினால் அந்தக்கட்டடத்திற்குள் நல்ல அதிர்வுகள் ஏற்படும் என்பதும் ஏன் உண்மையாக இருக்கக் கூடாது?

1. மனை வாங்கும்போது சதுரமாகவோ அல்லது செவ்வகமாகவோ இருப்பது நல்லது. தெருக்குத்து இல்லாத மனை சிறப்பு எனலாம்.
2. கட்டடம் கட்டும்போது கிழக்கிலும் வடக்கிலும் வெற்றிடம் இடம் விட்டு கட்ட வேண்டும்.
3. வடக்கு பகுதி பள்ளமாகவும் அதிக எடை இல்லாதவாறும் கட்ட வேண்டும். நீர் சேமிக்கும் தொட்டி அங்கு இருக்கலாம்.
4. தெற்கு பகுதி சற்று மேடாக இருத்தல் நலம். அதே சமயம் அங்கு அதிக எடை ஏற்றலாம். மாடி படிக்கட்டு போன்ற எடை ஏற்றும் கட்டுமானம் தெற்கு பகுதியில் நல்ல பலன் தரும்.
5. குழாய் கிணறு (borewell) வடக்கு அல்லது கிழக்கு பகுதியில் வர வேண்டும்.
6. சமையல் அறை தென் கிழக்கு மூலையில் (அக்னி மூலையில்) அமைக்க வேண்டும்.
7. படுக்கை அறை தென் மேற்கில் இருத்தல் நலம்.
8. கழிப்பறை மற்றும் குளியலறைகள் வட மேற்கில் (வாயு மூலை) வர வேண்டும்.
9. தென் மேற்கு மூலையில் (குபேர மூலை) கழிப்பறை மற்றும் குளியலறைகள் அமைக்க கூடாது. அமைத்தால் கடன் நிச்சயம் வாங்குவார்கள். சிலருக்கு கடன் கட்டுக்கடங்காமல் போகவும் வாய்ப்பு உண்டு.
10. வட கிழக்கு மூலையில் (ஈசான்ய மூலை) கழிப்பறை மற்றும் குளியலறைகள் அமைக்க கூடாது. முக்கியமாக கழிப்பறை நிச்சயம்கூடாது. அந்த அமைப்பு அங்கு வசிக்கும் ஆண்களின் உயிருக்கே உலை வைக்க வாய்ப்பு உண்டு.
11. தென் கிழக்கு மூலை பாதிக்கப்பட்டால் பெண்களுக்கு பாதிப்பு உண்டு.
12. வீட்டை சுற்றி சுற்றுச்சுவர் (compound wall) இருப்பது நல்லது.
13. பிரதான நுழை வாசல் கிழக்கிலோ அல்லது வடக்கிலோ இருத்தல் வேண்டும்.
14. ஒவ்வொரு அறையிலும் கூடிய மட்டிலும் நுழைவது கிழக்கிலோ அல்லது வடக்கிலோ இருக்குமாறு கட்டுங்கள்.
15. கோவிலோ அல்லது இடுகாடோ அல்லது மின்மாற்றியோ (transformer) வீட்டின் மிக அருகாமையில் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

ஜோதிடம், எண் கணிதம், வாஸ்து போன்றவற்றில் உள்ள பெரிய குறையே ஒவ்வொரு நிபுணரும் வெவ்வேறு கருத்துகளையும். விதிகளையும் சொல்லுவது தான். கடைசியில் சாதாரண மனிதன் எதைக் கடைப்பிடிப்பது எதை விடுவது என்று புரியாமால் மண்டை குழம்பி நிற்கிறான் என்பது தான் உண்மை.



கடக, விருச்சிக, மீன ராசிக்காரர்கள் வடக்கு வாசல் இருக்கும் படி வீடு கட்டினால் நல்ல பலன் என்கிறார்கள். கிழக்கு வாசல், சிம்மம், மேஷம், தனுசு ராசிக்காரர்களுக்கு உகந்தது என்கிறார்கள். மிதுனம், கும்பம் மற்றும் துலாம் ராசிக்காரர்கள் மேற்கு வாசலை தேர்தெடுக்க வேண்டும் என்கிறார்கள். ரிஷப, கன்னி மகர ராசிக்காரர்களுக்கு உகந்த வாசல் தெற்கு வாசல் ஆகும். அதே போல் தான் ஒவ்வொரு நட்சத்திரகாரர்களுக்கும் ஒரு திசை உகந்ததாக இருக்கும் என்கிறார்கள் சில வாஸ்து நிபுணர்கள்.

உண்மையில் வாஸ்து பார்க்கும் போது ராசி, நட்சத்திரம் போன்றவற்றைப் பார்க்க வேண்டியதில்லை என்பதே உண்மை.

ஒரே வீட்டில் பல ராசிக்காரர்களும் நட்சத்திரகாரர்களும் இருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாசல் வைப்பது எங்ஙனம் சாத்தியமாகும்? குடும்பத் தலைவரின் ராசி நட்சத்திரம் பார்த்து தேர்தெடுப்பதும் தவறு தான்.

எந்த திசைப் பார்த்த வீட்டு மனையையும் வாங்கலாம். பாதகமில்லை. வடக்குப் பார்த்த மனையும் கிழக்குப் பார்த்த மனையும் விசேஷம். எந்த திசையில் வேண்டுமென்றாலும் வாசல் இருக்கலாம். தப்பில்லை. என்ன கவனிக்க வேண்டுமென்றால் கிழக்கில் வாசல் வைப்பதாக இருந்தால் வடக்கு சார்ந்த கிழக்கில் வைக்க வேண்டும்.

வடக்கில் வாசல் வைப்பதாக இருந்ததால் கிழக்கு சார்ந்த வடக்கில் வைக்கவும். தெற்கு என்றால், கிழக்கு சார்ந்த தெற்கு, மேற்கு என்றால், வடக்கு சார்ந்த மேற்கு என்று தேர்ந்தெடுக்கவும்

# எந்த ராசிக்காரருக்கு எந்த நாள் அதிர்ஷ்டமானது



ஜாதகம், பரிகாரம், ராசிபலன் போன்றவற்றின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் அதிகம் உள்ளனர். இருப்பினும், மனதின் ஓர் ஓரத்தில் இதன் மீது நம்பிக்கை இருக்கத் தான் செய்கிறது. ஆனால் அதை வெளிப்படையாக காண்பித்துக் கொள்வதில்லை

எப்படி ராசியைக் கொண்டு, அந்த ராசிக்குரியவரின் குணத்தை சொல்ல முடிகிறதோ, அதேப் போல் எந்த ராசிக்கு எந்த நாள் அதிர்ஷ்டத்தை வழங்கும் என்பதையும் சொல்ல முடியும். அந்த நாளில் அந்த ராசிக்காரர்கள் தங்களது முக்கிய பணிகளை மேற்கொண்டால், வெற்றிக் கிட்டும். அது தொழிலாகட்டும் அல்லது சொந்த வாழ்க்கையாகட்டும், அனைத்திலும் வெற்றி கிடைக்கும். சரி, இப்போது எந்த ராசிக்காரர்களுக்கு எந்த நாள் அதிர்ஷ்டத்தை வாரி வழங்கும் என்று பார்ப்போம்.

**மேஷம்**

மேஷ ராசிக்காரர்களுக்கு செவ்வாய் கிழமை அதிர்ஷ்டத்தை வழங்கும் நாள். இந்நாளில் எந்த ஒரு செயலை செய்தாலும் வெற்றிக்கிட்டும். நீங்கள் மற்றவர்களிடம் உங்களது திறமையை வெளிக்காட்ட நினைத்தால், இந்நாளில் மேற்கொள்ளுங்கள், இதனால் வெற்றி உங்களுக்கே

**ரிஷபம்**

வெள்ளி, புதன், சனி மற்றும் திங்கள் போன்ற கிழமைகள் ரிஷப ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டத்தை வழங்கும். செவ்வாய் கிழமைகளில் ஊதாரித்தனமான செலவுகளைச் செய்யக்கூடும். இந்த ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் நல்லது.

**மிதுனம்**

இந்த ராசிக்காரர்களுக்கு புதன் கிழமை அதிர்ஷ்டத்தை வாரி வழங்கும். மிதுன ராசிக்காரர்கள் எந்த ஒரு புதிய செயலையும் புதன் கிழமைகளில் மேற்கொண்டால் நல்லது நடக்கும். மொத்தத்தில் இந்த கிழமை உங்களுக்கு முன்னேற்றத்தை மட்டுமே தரும்.

**கடகம்**

கடக ராசிக்காரர்களுக்கு ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகள் இன்பம் மற்றும் மகிழ்ச்சியை அளிக்கும். திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகள் வெற்றியை வாரி வழங்கும். புதன்கிழமை பயணங்கள் மற்றும் முதலீடுகளுக்கு உகந்தது. சனிக்கிழமை சாதகமில்லாத நாள். இந்த ராசிக்காரர்கள் திங்கட்கிழமைகளில் விரதமிருப்பது நல்லது.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்களுக்கு ஞாயிற்று கிழமை சிறந்த நாள். இந்நாளில் உங்களது திறமையை முழுமையாக காணலாம். இந்நாளில் எந்த ஒரு காரியத்தில் இறங்கினாலும் வெற்றியை மட்டுமே பரிசாகப் பெறுவீர்கள்.

(தொடரும்)

## சிங்களதமிழ் புத்தாண்டை முன்னிட்டு....
விசேட விலைக்கழிவு

# MAJOR II




வாழ்நாள் உத்தரவாதத்துடனான ரூபா **2500.00** பெறுமதி யான மேற்படி குளுக்கோ மீற்றர் 09.04.2019 இல் இருந்து 20.04.2019 வரையான காலப்பகுதியில் ரூபா **2000.00** ஆக குறைக்கபட்டுள்ளது. இத்துடன் ரூபா 1161.00 பெறுமதியான குச்சிகளும் ரூபா 75.00 பெறுமதியான ஊசிகளும் இலவசமாக அடங்கும்.
எனவே ஒரு மீற்றரின் நிகர விலை ரூபா 764.00 மட்டுமே.

வடபுல விநியோகஸ்தர்:

Sole Importers
George Steuart
Health (Pvt) Ltd
No.7E, Postmasters Place,
Off Templers Road,
Mount Lavinia,
Srilanka.

Vanikaa Surgicals
203, Hospital Road
Jaffna.
TP No: 021 222 0077
Mob No: 0774422367,
0775106910
E-mail: vanisurgi@sltnet.lk

---

## மண்கும்பான்
## அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
## மஹோற்சவம் - 2019



இன்று (09.04.2019)
செவ்வாய்க்கிழமை
ஒன்பதாம் திருவிழா
வசந்தோற்சவ காட்சி
(கப்பல் வாகனம்)

f:mankumpan vellaipttady sri veerakathy vinayagar

## யாழ் அத்தியடி
## சிதம்பர நடராஜ ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
## மஹோற்சவம் - 2019

இன்று (09.04.2019)
செவ்வாய்க்கிழமை
நான்காம் திருவிழா.

அனுசரணை

**உதயா** ஜுவல்லர்ஸ்
79, Kasthuriyar Road, Jaffna,
Srilanka.
021 222 4434, 021 221 6877
uthayaajewellers4434@gmail.com
f www.facebook.com/uthayajewellers



---

# மயிலே குயிலே

மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!



---

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## அம்பலவாணர் கந்தையா பாலசிங்கம்
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



அன்னையின் மடியில்
சரண்
16.10.1925
கதிர்காம சுவாமி திருவடியில்
சரண்
09.04.2012
திதி:- பூர்வபக்க திருதியை (23.03.2019)

ஈடு இணையற்ற தந்தையே
கண்களில் நீர் கோர்க்கவில்லை
என்றாலும் நீங்காத சோகம்
வெண்மேகமாய் எங்கள் ஐயா
உங்கள் பசுமையான
நினைவுகளுடன்....

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
"துவாரகா"
கதிர்காமசுவாமி கோயிலடி,
காரைநகர்.
(CS/24511)(11.17)

---

## மஹா சக்தியுள்ள
## வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

* காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
* காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
* பெற்றோர் விருப்பமின்மையா?
* கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
* வேலைத்தளத்தில் பிரச்சினையா?
* காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

{இரகசியம் பேணப்படும்}

- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.
**0778 432 602 / 075 302 4239**
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

---

### அலுவலக உதவியாளர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் கல்வி நிறுவனத்திற்கு கணினி அறிவுள்ள அலுவலக உதவியாளர் (பெண்) தேவை. **தொடர்பு:077 386 7458**

### தேவை

யாழ்ப்பாணத்தில் பில் கிளார்க், பொதியிடல், உதவியாளர், சமையல் உணவக உதவியாளர் என்பவற்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.
**தொடர்பு:077 174 6101**

### வேலையாள்கள் தேவை

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் விநியோக நிறுவனத்திற்கு (Distributor) அலுவலகத்தில் இருந்து Quick book மற்றும் Excel முறையில் கணக்கியல் வேலை செய்வதற்கு பெண் பணியாளர் தேவை. குறித்த பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**077 720 1248, 021 227 0162**
E mail : arul_inform@yahoo.com

---

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07 . 05 . 1950

உதிர்வு
25 . 03 . 2004

## திருமதி வைகுந்தராஜா
## தையல்நாயகி (தேம்பாள்)
(மண்டைதீவு)

திதி: சதுர்த்தி

நிலவு ஒளியிழந்து
நினைவு உமை சுமந்து
கடல் அலையிழந்து
கண்கள் அருவிகொண்டு
வானம் நிறமிழந்து - உம்
வதனம் நிழல் படமாகி
ஆண்டுகள் பதினைந்து- எம்
அன்னையின் அன்பை நாம் இழந்து.....!

ஆடியபாதம்பிட்டி வீதி,
சாவகச்சேரி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **இராமலிங்கம்**
## குலசேகரம்பிள்ளை
(புங்குடுதீவு - மடத்துவெளி - 8)



நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கி
ஆண்டொன்று சென்றாலும்
எங்களை விட்டு நீங்காத
உங்கள் நினைவுகள்
நாம் வாழ்ந்திடும் காலம் முழுவதும்
எங்கள் நெஞ்சில் நிலையாய்
வாழ்வீர்கள்

**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

மண்ணில்
26.11.1930

விண்ணில்
20.03.2018

அன்னசத்திர லேன், கந்தர்மடம்.
(கொழும்பு - 06)
(CS/24558)(11.17)

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.03.2019 திங்கட்கிழமை
சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவி
## அமரர் தர்மலிங்கம்
## அன்னராணி
அவர்களின் அந்தியேட்டி ஆத்மசாந்தி
கிரியைகள் நாளை (10.04.2019)
புதன்கிழமை அதிகாலை 5.00
மணியளவில் அன்னாரின் இல்லத்தில்
நடைபெற இருப்பதால் அத்தருணம்
தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து
கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி.

குடும்பத்தினர்.

(CS 23783)(14.17)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரை அண்மித்த கோயிற்குடியிருப்பு சப்பச்சி மாவடி இணைந்த வீதியில் மூன்றேமுக்கால் (3¾) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. இருவர் சேர்ந்தும் பிரித்து எடுத்துக் கொள்ளலாம். (CS 00586) (14.17)

**077 325 5474**

## நாஹா மருத்துவ நிலையம்

அதிக கை, கால் விறைப்பு. எலும்பு மூட்டுக்கள் பாதிப்பு. பாரிசவாதம். முழங்கால் வாதம். அல்சர். தீராத புண்கள். குழந்தையின்மை - சிறப்புச் சிகிச்சை

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய். 077 321 2740 (CS/24592) (11.17)

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

**FACULTY OF SCIENCE**

**Senior Professor / Professor of** Zoology/ Fisheries

**Note:**

The applicants those who applied for **Post of Professor of Zoology** in response to our advertisement dated 19.05.2014 need not apply again.

&

The applicants those who applied for **Post of Professor of Fisheries** in response to our advertisement dated 05.07.2017 need not apply again

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.139,175 – 11x 2,925– 171,350/-p.m |
| Professor | Rs.117,350-13 x 2,700-152,450/-p.m |

The above salary scales for permanentpositions are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016(v) dated 01.05.2018.

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary to the academic staff:
   - i) Academic allowance
     - Senior Professor - 167%
     - Professor - 162%
   - ii) Additional monthly allowance – 20%
   - iii) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

- I. Sabbatical leave entitlement as per the existing UGC Circulars
- II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
- III. Gratuity payments
- IV. Employees' Trust Fund benefits
- V. Free Medical Services

**Closing dates**

Application should reach us on or before**08.06.2019**.

Applications and other documents for the Post of **Senior Professor /Professor** shall be sent to the **Vice-Chancellor** with a covering letter.

* Applicants for the **Post of Professor** are requested to submit the following in addition to the prescribed Application Form:

a) 18 copies of his/her Curriculum Vitae

b) 18 copies of self-assessment of his/her whole career that lists and specifies the contribution to:
- ➢ Teaching, Scholarship and Academic Development
- ➢ Research, Scholarship and Creative Work
- ➢ Dissemination of Knowledge
- ➢ Awards, University, National and International Development Activities

  The Self-Assessment should be prepared in accordance with the marking scheme, (issued with this document) giving details under each heading/sub heading.

c) Three copies each of the documents to support self-assessment in :
- ➢ Teaching, Scholarship and Academic Development (Section 1.0)
- ➢ Research, Scholarship and Creative Work (Section 2.0)
- ➢ Dissemination of Knowledge (Section 3.1)
- ➢ Awards, University, National and International Development Activities and other relevant documents listed in the self-assessment. (Section 3.2 & 3.3)

  (Section 2.0 & 3.1 could be prepared as a separate document)

d) Titles of five (05) outstanding research publications/research papers by the candidate.

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk**. Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form.Those who wish to obtain application forms by post are requested to send a self –addressed stamped envelope 23x10 c.m. in size along withthe paid Bank Slipto the above address.

The candidates who apply for **more than one** position should submit **separate application** along with separate **Bank slip**.The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible &incompleteapplications, and applications received by the University after the closing date will be rejected without intimation.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA. 08.04.2019

**YAMAHA**
*Revs Your Heart*

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
விசேட சலுகை எம்மிடம் Yamaha மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் அதிஸ்டம்

நல்லூர் பின் வீதியில் (பருத்தித்துறை வீதி) அமைந்துள்ள எமது காட்சிக் கூடத்தில் பழையதை கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை கொண்டு செல்லுங்கள்.

8 - 12 ஆம் திகதி வரை மட்டுமே.



**மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி**

ரூபாய் 3.5 மில்லியனுக்கும் மேலான பெறுமதியுள்ள **Brand NEW**

**WAGONR ஐப் பரிசாக வெல்லுங்கள்**



அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு எலக்ட்ரானிக் பொருள்களையும் வெல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**DIGITAL ELECTROICE**
62/16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4040 Mob : 077 662 3824 Email: nraveen1981@gmail.com

தமிழ் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்

ABI Fashion World
**அபி பஷன் வேல்ட்**



இந்தியாவில் இருந்து புதுவருடத்திற்கு என இறக்குமதி செய்யப்பட்ட நவீன ஆடைத் தெரிவுகள் உங்களுக்காகவே...

3ஆவது தளத்தில் **40%** விசேட தள்ளுபடி

வருடத்தில் குறைந்த விலை
வருடம் முழுவதும் நிறைந்த சேவை.

(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்குட்பட்டது)

**13.04.2019 வரை**




**4 நாள்கள் மட்டுமே**

112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738 | 0773246503 (10)

# நினைவஞ்சலி



## திருமதி சிவபாக்கியம் (ஜெகசோதி) நவரட்ணராஜா

தோற்றம் 11.02.1921 | மறைவு 27.01.2019

ஈழவுளநாடு, யாழ்நகர்கீழ்பால்
வளமுடன் திகழும் பாரியபதியாம்
சைவமும் தமிழும் மேலெனப் போற்றும்
கலைகளும் கல்வியும் சிறந்தே ஓங்கும்
அரியாலை என்னும் அழகுநல்லூரில்

சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த
நல்தம்பதியர் சரவணமுத்து – அன்னப்பிள்ளை
அவர்களுக்கு ஊரின் பெருமை காக்கவென்றே
கனிஷ்ட புதல்வியாய் அன்புடன் ஜெகசோதி
என்று அழைத்த சிவபாக்கியம் எனும் நீவிர்
உதித்த நன்னாள்
ஆயிரத்துத்தொளாயிரத்திருப்பத்தொன்று
மாசித்திங்கள் பதினோராம் நாள்

வீட்டின் எதிரே வீற்றிருக்கும் தெய்வம்
சித்தி விநாயகர் மேல் பக்தி கொண்டீர் மெய்யாய்
சித்திகள் ஆயிரம் வந்தன அதனால்
கல்வியும் செல்வமும் இனும் பல பலவும்

அண்மையில் அமைந்தது பார்வதி
வித்யாசாலை, அதன்பின் படித்தது
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,பின்
ஊரவர் காசிப்பிள்ளை சேர்ந்தெழுப்பிய
மாபெரும் நிலையம் யாழ். இந்துக்கல்லூரியில்
வீரமுள்ள முதல் பெண் மாணவியாய்
சேர்ந்து படித்து படைத்தது சரித்திரம்
கற்றபின் பெற்றீர் சிரேஷ்ட மற்றிக்குலேஷன்
பெற்றீர் பெருமை எமக்கும் அதுவே

மிளிர்ந்ததோ நல்லதோர் ஆசானாக
கொக்குவில் இந்துக்கல்லூரி
வண்ணார் பண்ணை வைத்தீஸ்வர
வித்தியாலயம்
அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை
கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் என
கணித ஆங்கில கல்விக்கென்றே
வாழ்வினில் நீவீர்
தந்தது ஆண்டுகள் நாற்பத்துமூன்று
அர்ப்பணிப்புடனும் தொழில்சார் பண்பொடும்

பண்பும் அன்பும் ஒருங்கே பெற்று
கண் எனப்படும் கல்வியை வளர்க்க
பணிவும் திறனும் துணிவும் கொண்டு
கணிதமும் மொழியும் சரிவரப் பயிற்றியே
மணிபோல் மாணவர் பலரைத் தந்தீர் மானிடம்
பயன்பெற
இதுபோலொரு கொடை இன்னொன்றுண்டோ?

பூந்தோட்டப் பசுமை உங்கள் வீட்டில் அங்கே
ஓர்நாள்
வந்தார் வாழ்க்கைத்துணைவராய் வாட்டசாட்ட
வடிவு கொண்ட நவரட்ணராஜாவெனும்
நற்குடிமகன், நற்குணத்தோன், நாற்பத்து நாலில்

பந்துக்கள் பாசமிகு பெற்றோர், உற்ற
உடன்பிறந்தோர் மற்றும் நண்பர்கள் கூடி

பிரேமை, பிரீதியுடன் வாழும் நன்னாள்களில்
வந்துதித்தார் நான்கு பெண்கள் வண்ணத்தேர் –
போலே
அருமைப்புதல்விகளாய்

உங்கள் உழைப்பு பள்ளியுடன் மட்டுமா?
தோட்டங்கள், வீட்டுநிலம், வயல்காடு, காணி என
பலவும் உம் கைகளால் வளர்ந்துபயன் தர
சிலபேரல்ல உம்மை அழைத்தது பணக்காரி என்று

உங்களை ஊரில் எவரும் மதிப்பர்
பண்புகள் பல கொண்ட பெண்மணி என்று
உங்கள் கைகளால் வழங்கிய சீர்கொண்டு
பெண்கள் பலரும் குங்குமம் பெற்றனர்

ஊரார் பலரும் வாழ்வினில் உயர்ச்சி
அடைந்ததிலுங்கள் பங்கும் அதிகம்
தங்கள் நன்றியை முறையுடன் செலுத்த
வருவர் அவர்கள், வீடு தேடி, சரியாக

எங்கும் என்றும் நிறைந்த புகழுடன்
மங்காப்பெருமை கொண்டே வாழ்ந்தீர்
உங்கள் கடன்களை நன்றே முடித்தீர்
எங்கள் வாழ்விலும் மங்கலம் கண்டீர்

லண்டன் வந்தீர், பணிஒய்வு பெற்றபின்
கண்டீர் எங்களை, களிப்பே கொண்டீர்
கண்ணெனும் பிள்ளைகள், பேரர்கள் சூழ
மகிழ்வுடன் வாழ்ந்தீர் பின்பு சென்றீர் கனடா
அங்கும் அதுபோல் கொண்டது மகிழ்ச்சி
உங்கள் பேரர் பதின்மர், பூட்டர்மார் பன்னிருவர்
அவர்கள் என்றும் சொல்வது
அம்மம்மா ஓர் அன்புக்கடல்

கஷ்டம் மக்கள் படக்கூடாதென
பிரிந்து சென்றீர் பினர் எனும் நகர்க்கு
இருபது வருடம் இரும்பெனும் உறுதி கொள்
தனியொரு மாதாய் மகிழ்வொடு வாழ்ந்தீர்
சுதந்திரப் பெண்ணாய் வாழ்ந்த நன்நாளில்
நாங்கள் கூடும் நல்லதோர் மையம்
நீங்கள் வாழ்ந்த பின்னர் இல்லம்

உங்கள் உறுதி எவர்க்கு வரும்?
உங்கள் நேர்மை எவர்க்கு வரும்?
உங்கள் தயாளம் எவர்க்கு வரும்?
உங்கள் நேசம் எவர்க்கு வரும்?
உங்கள் பாசம் எவர்க்கு வரும்?
உங்கள் கடமையுணர்வு எவர்க்கு வரும்?

அன்பான அம்மாவே!
எமையெல்லாம் தூண் போல் தாங்கினீர்
உமைப்பிரிந்த சோகம் தாளவில்லை
கண்ணீரும் வற்றிப்போனது
உங்கள் நினைவுதான் எங்களுக்கினி

நீங்கள் எமைவிட்டுப் பிரிந்தது
இரண்டாயிரத்துப்பத்தொன்பது தை இருபத்து
ஏழில்
**அடைவீர் சாந்தி அங்கு**

*அன்பு மக்கள்*

**தேவிகா பேரின்பநாயகம், (லண்டன்),**
**சுசீலா யதீந்திரா (கனடா), நளாயினி குகநாதன் (லண்டன்),**
**தர்சினி பாலசிங்கம் (கனடா)**

அன்னாரை நினைவுகூரும் முகமாக எதிர்வரும் (12.04.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் மதியபோசனம் வழங்கப்படும்.
முகவரி:- 36, அருளம்பலம்லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.
விபரங்களுக்கு :- க.குகநாதன் - 077 551 9764 அல்லது
0044 7710 8268 35 (லண்டன்)
நளாயினி -078 664 7435.

# மரண அறிவித்தல்



## இராசலிங்கம் புவனேஸ்வரி

கோண்டாவில் மேற்கு கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் புவனேஸ்வரி 06.04.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி பூலோகசிங்கம், தெய்வேந்திரம், பூமணி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயபாலன், சரோமலாதேவி, பாஸ்கரன். ஆனந்த்குமார், நகுலேஸ்வரன், யோகேஸ்வரன் சபேசன் ஆகியோரின் தாயாரும் ஜெயபாலன், ஜெயஸ்ரீ, தர்சினி, சித்திரா, அருந்தினி ஆகியோரின் மாமியாரும் பானுஜன், பவிசனா, விதுஷா, அனுசன், ஆரனிகா, மானுஜா, தாரணி, தர்மிகா,மோசிகா, தர்சனா, ஐய்மிதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10.04.2019 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாரதி வீதி, K.K.S றோட்,**
**கோண்டாவில் மேற்கு.**

(CS 24594)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திருமதி பார்வதிதேவி சிவானந்தம் (சிந்தா)

குமகுடை பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பார்வதிதேவி சிவானந்தம் (ஓய்வு பெற்ற பதிவு பெற்ற வைத்தியர்) 08.04.2019 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை மாமாங்கம் தம்பதிகளின் மருமகளும் சிவானந்தத்தின் (Retired M.L.T) அன்பு மனைவியும் சிவசக்தி(ஆசிரிய ஆலோசகர் - சிங்களம், வலிகாமம் கல்வி வலயம்),சிவநந்தினி (சிரேஷ்ட விரிவுரையாளர் - மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்), சிவமோகன்(உரிமையாளர் - Photo select புகைப்பட கலையகம்), சிவகரன்(ஆசிரியர் - அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சயந்தன்(பிரதி அதிபர் - அருணோதயக் கல்லூரி), உதயகுமார்(பொறியியலாளர் - திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), கிருபவதனி(ஆசிரியை - வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை). அமுதா(ஆசிரியை - ஒட்டகப்புலம் R.C.T.M.S) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராம், அபிசயனி, அபிசரண், அஸ்வினி, அபிநயா, அபிசாயீசன், அனந்திகா, அபிசாய்ராம், ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், உமாபதிதேவி, கௌரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சகுந்தலாதேவி விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் "சிவபதி" பன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"சிவபதி"**
**பன்னாலை, தெல்லிப்பழை.**

(CS 24599)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 724 6412 (சயந்தன்) / 077 399 7342 (சிவமோகன்)**
**077 899 6004 (சிவகரன்) / 077 222 0319 (சிவநந்தினி)**

SUMITOMO TIRES
பாதுகாப்பானவை நம்பகரமானவை



ENCOUNTER HT
245/70R16
255/70R15
265/70R16
L/T 245/75R16
இன்னும் பல அளவுகளில்



HTR 900
175/65R15
185/60R15
185/65R15
215/55R17
215/60R16
இன்னும் பல அளவுகளில்

- அதிஉயர்தரம்
- அதிகூடிய தூரம்
- உயர் தொழில்நுட்பம்
- ஸ்திரத்தன்மை
- அநாவசிய ஒலி / இரைச்சல்கள் அற்றது


விலை ரூபா.16,900/- முதல்

Piccaso

யாழ் நகரில் உங்கள் தேவைக்கு
பொபியூலர் மோட்டர் ஸ்டோர்ஸ்
270, ஸ்டேன்லி ரோட், யாழ்ப்பாணம். தொ.பே.இல. 021 2223535, 021 2222403 | பெக்ஸ்: 021 2223535

இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்
V.R. VADIVETKARASAN ENTERPRISES
271, Sea Street, Colombo - 11. Tel: 0112 434 800, 2 435 732 | Fax: 2 435 731

## கண்ணீர் அஞ்சலி



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றிய

**நாகேந்திரன் சுபாதர்ஷன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.**

(CS/24595)(11,17)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சற்குணரத்தினம்

**(அஞ்சல் ஊழியர் - கொடிகாமம்)**



மலர்வு 26.05.1965 உதிர்வு 07.04.2019

கொயிலாமனை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சற்குணரத்தினம் 07.04.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக்கணவரும் பதுர்ஸிகன் (RDHS பணிமனை - யாழ்ப்பாணம்)தனுசிகன், கேனுஜா ஆகியோரின் பாசமிகுதந்தையும் யசோதரன், சாந்தினி , பவளராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சதாநந்தினி, உதயசூரியன் யோகானந்தம் மற்றும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், குலேஸ்வரி, மிருகண்டர் மற்றும் மங்கயற்கரசி, சுவாமிநாதன், தங்கேஸ்வரி , கேதாரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 10.04.2019) புதன்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனகன்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**கொயிலாமனை,**
**கொடிகாமம்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 848 4010**

**கோழிக்குஞ்சு இறந்துவிட்டது என்றேன்... கேட்கவில்லை!**

# விருதுபெற்ற சிறுவனால் நெகிழும் தந்தை

இணையப் பாவனையாளர்களின் மனங்களை வென்ற மிசோரம் சிறுவனுக்கு, அவன் படிக்கும் பள்ளியில் விருது கொடுத்திருக்கிறார்கள்.

மிசோரம் மாநிலத்தின் சாய்ராங் பகுதியைச் சேர்ந்த 6 வயது சிறுவன் டெரக் (Derek). அவன், தனது சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டு கோழிக்குஞ்சு குறுக்கே வந்துவிட்டது. உடனடியாக பிரேக் பிடிக்க முடியாத சிறுவன், கோழிக்குஞ்சு மீது சைக்கிளை ஏற்றிவிட்டான்.

கோழிக்குஞ்சு துடித்ததைப் பார்த்து சிறுவன் பதறிவிட்டான். அடிபட்ட கோழிக்குஞ்சை தூக்கி க்கொண்டு, அருகில் இருந்த மருத்துவமனைக்குச் சென்றுள்ளான். தன்னிடம் இருந்த பத்து ரூபாயைக் கையில் எடுத்து, அங்கிருந்த தாதியிடம் நீட்டினான். `கோழிக் குஞ்சை எப்படியாச்சு காப்பாத்துங்க' என்று கெஞ்சியுள்ளான். அந்த கோழிக் குஞ்சு, ஏற்கெனவே இறந்துவிட்டதாக நர்ஸ் கூறிய போதும் அதை ஏற்க அவன் மனம் மறுத்தது. அங்கேயே முகத்தில் பரிதவிப்புடன் நின்று கொண்டிருந்தான். அதைப் பார்த்து நெகிழ்ந்துபோன தாதி, அந்தக் காட்சியைப் ஒளிப்படம் எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டு, அதில் சிறுவனைப் பாராட்டியிருந்தார். சிறுவனின் பரிதவிக்கும் அப்பாவித்தனமாக முகம், இணைய மனங்களை வென்றுவிட்டது. ஒரே நாளில் சிறுவன் செம வைரல்.



வைரல் என்னும் வார்த்தைகளால் மட்டும் இந்தச் சம்பவத்தை அடைத்துவிட முடியாது. சிறுவனின் இரக்க குணமும், அறியாமையும் அனைவரையும் மெய்சிலிர்க்கவைத்துவிட்டது. சாலையில், மனிதர்கள் அடிபட்டுக் கிடந்தாலே அமைதியாகக் கடந்துசெல்லும் குரூர மனம்கொண்ட மனிதர்களாக மாறிக்கொண்டுவருகிறோம். இப்படியிருக்க, கோழிக்குஞ்சின் சிகிச்சைக்காக மருத்துவமனை வரை சென்ற 6 வயுது சிறுவன், நாம் அனைவருக்கும் பாடம் கற்றுக்கொடுத்திருக்கிறான் என்றே சொல்ல வேண்டும்.

முன்னதாக, கோழிக்குஞ்சு தன் சைக்கிளில் சிக்கி அடிபட்டதும், அதை தூக்கிக்கொண்டு தன் தந்தையிடம் ஓடியிருக்கிறான். அவரோ 'இறந்து விட்டது இனி ஒன்றும் செய்ய முடியாது' என்று கூறி யுள்ளார். ஆனால், அதை ஏற்றுக்கொள்ளாத சிறுவன், என்னிடம் கோபித்துக் கொண்டு தன் சேமிப்பில் இருந்த 10 ரூபாயை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றதாக லால்சென்ஹிமாவின் தந்தை கூறியுள்ளார்.

சிறுவனின் உயர்ந்த உள்ளத்தை மதிப்புறுத்தும் விதமாக அவனது பள்ளியில், அவனுக்கு சால்வை அணிவித்து விருது வ்ழங்கி மதிப்பளித்துள்ளனர். அந்தப் புகைப்படங்களும் இணையத்தில் வைரலாகிவருகின்றன. புகைப்படத்தைப் பார்க்கும்போது, சிறுவனுக்கு அணிவித்திருக்கும் சால்வை மிசோரம் பாரம்பார்ய வழக்கத்தின் படி பெரிய பெரிய ஆளுமைகளை மதிப்பளிக்க அணிவிக்கப்படுவது. எனவே, இது உண்மையில் மகிழ்ச்சியான விஷயம்தான்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி விஞ்ஞான பாட ஆசிரியர் **திரு. சி. சிவகரன்** அவர்களின் பாசமிகு தாயாரும் பிரதி அதிபரும் அளவையியல் பாட ஆசிரியருமான **சு. சயந்தன்** அவர்களின் அன்பு மாமியாருமான

**திருமதி பார்வதி சிவானந்தம்**

அவர்கள் நேற்று (08.04.2019) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலை சமூகம்**
**யா/அருணோதயாக் கல்லூரி . அளவெட்டி**

## மரண அறிவித்தல்

### இராசையா கனகராஜசிங்கம்

**(K.G. Industries)**



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகராஜசிங்கம் நேற்று (08.04.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுலோஜனாவின் (முன்னாள் ஆசிரியர் - யா/ சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்) அன்புக்கணவரும் அகிலன் (மக்கள் வங்கி - யாழ். பல்கலைக்கழக கிளை), தாரணி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகுரு சக்திவேல் (கார்கில்ஸ்), சிறிஜெயந்தி ( ஆசிரியை - யா/அளவெட்டி அருணாசல வித்தியாலயம்)ஆகியோரின்அருமை மாமனாரும் ஆரபி, ஆரூரன், அரங்கன், லம்போதரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(09.04.2019)செவ்வாயக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"கொழுந்து கொட்டேஜ்"**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 954
சீட்டிழுப்பு திகதி 2019.04.07 ஞாயிற்றுக்கிழமை
N 08 57 67 72

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3171 திகதி: 2019.04.08 திங்கட்கிழமை
நீலம்
07 24 37 75 U 69
38,911,320/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 579
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.04.08
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,964,160/-
வெற்றி இலக்கங்கள்
20 54 60 73 F

## முதலாமாண்டு நினைவஞ்சலி

பிறப்பு 19 06 1933



இறப்பு 20 03 2018

அமரர்.
திரு. **பரமலிங்கம் சண்முகராசா**

முகத்தினில் நிலைத்த முறுவல்.
அகத்தினில் நிறைந்த அன்பு.
இகத்தினில் துன்பம் போக்கும்
பகிர்திடும் பேச்சும் பண்பும்
தகர்ந்திடும் அமைதியற்ற காலத்தில்
சுகத்தினைக் கருதாப் பணிபுரிந்து
இன்று
ஜகத்தினை விடுத்து இறையடி
சேர்ந்தீர்-ஐயா!
உன் ஆன்மா சாந்தி! சாந்தி!

உதிர உறவினர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 03 1947



மறைவு 11 04 2016

**அருணாசலம் கமலாகரன்**

திதி: வளர்பிறை சதுர்த்தி (09.04.2019)

அப்பா! இமை மூடித் திறப்பதற்குள்
வருடங்கள் மூன்று உருண்டோடி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உங்கள் நினைவுகள் எம்முடன்
என்றென்றும் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

S.M.கேனியடி,
காரைநகர்.





# ரஜினிக்கு வில்லனாக நடிக்கும் பிரபல நடிகர்

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ரஜினி நடிக்க இருக்கும் புதிய படத்தில் அவருக்கு வில்லனாக பிரபல நடிகர் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. ரஜினி நடிப்பில் சமீபத்தில் வெளியான படங்களில் வில்லன் கதாபாத்திரங்களுக்கான நடிகர்கள் ஹிந்தியில் இருந்தே கொண்டு வரப்படுகின்றனர்.

காலா படத்தில் நானா படேகர், 2.0 படத்தில் அக்ஷய் குமார், பேட்ட படத்தில் நவாசுதீன் சித்திக் ஆகியோர் நடித்திருந்தனர். இந்த நிலையில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் புதிய படத்தில் ரஜினிகாந்துக்கு யார் வில்லனாக நடிக்க உள்ளார் என்ற எதிர்ப்பார்ப்பு ரசிகர்களிடையே ஏற்பட்டிருந்தது.

ஏப்ரல் 10ஆம் திகதி மும்பையில் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. கதாநாயகிகளாக நயன்தாராவும், கீர்த்தி சுரேசும் நடிக்க வாய்ப்புள்ளது. மேலும், ரஜினியின் மகளாக நிவேதா தாமஸ் புதிதாக அணியில் இணைந்துள்ளார். இந்த நிலையில் இயக்குனரும் நடிகருமான எஸ்.ஜே.சூர்யாவை வில்லனாக நடிக்க படக்குழுவினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாக புதிய தகவல் தற்போது வெளியாகி இருக்கிறது.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1559 சீட்டிழுப்பு திகதி 08.04.2019
வெற்றி இலக்கங்கள்
15 21 24 25 Z
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ 29, 331, 388/=

## பெயர்மாற்றம்

**மகேந்திரம்** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **மகேந்திரம் அண்ணாமலை அலன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மகேந்திரம் அண்ணாமலை அலன்** என்றே கைபொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**-மகேந்திரம் அண்ணாமலைஅலன் -**

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் **திருமதி.தர்ஷினி நெல்சன் பொனபாட்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**மிக்கேல் ஸ்ரீபன் ஜோர்ஜ்**

அவர்களின் மீளாத்துயரினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், சாவகச்சேரி.**

(C/9868)(11,17)



நாள் முழுதும் கூலிக்காக சுமை தூக்கியவனுக்கு... இரவில் கிடைத்தது இந்த சுகமான சுமை...



இதுல எது தர்பூசணி என்று தெரியலையே...?

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
15 . 10 . 1946



இறைவன் அடியில்
21 . 03 . 2018

அமரர்

## கந்தையா சீவரத்தினம்

திதி: 09.04.2019

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குல விளக்கே
நீங்கள் மறைந்து ஒரு ஆண்டு அல்ல எத்தனை
ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
பசுமையாக எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப்பிரார்த்தனை செய்து கொண்டு
உங்கள் ஆசியை வேண்டி நிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# நீர்வேலி வடக்கு காளி அம்மன் கோவில் அறிவித்தல்

பரம்பரை நிர்வாக சபை உறுப்பினர் உரித்து மற்றும் மாதாந்த பூசை உரித்து ஆகியவற்றைத் தற்காலம் கொண்டிருப்பவர்களை அடையாளம் கண்டு நிச்சய்ப்படுத்திக்கொள்ளுதலும்அதன்அடிப்படையில்நிர்வாகசபையைஒழுங்குறுத்தி அமைத்தலும்

மேற்படி ஆலயத்தின் பரம்பரை வழிவந்த தற்போதைய தர்மகர்த்தாக்கர், முகாமையாளர்கள், பூசை உரித்துக்காரர்கள் என்ற கோதாவில் இவ் அறிவித்தலை எம்மால் வழங்கப்படுகின்றது.

இவ் ஆலயத்தின் நிர்வாகமும் தொடர்புபட்ட விடயங்களும் 1936 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தினால் 7163 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் நியதிகளுக்குக் கட்டுப்பட்டவனாய் அமைந்திருந்து வந்துள்ளன.

குறித்த தீர்ப்பின் நியதிகளை அடிப்படையாகக்கொண்டு பின்னர் 1958.10.15 ந் திக்தி நிறைவேற்றப்பட்டதான பராமரிப்புத்தத்ததுவ சாதனம் என்ற தலைப்பிலான 3615ஆம்இலக்கஉறுதியின்நியமனங்களின்படிஆலயத்தின்நிர்வாகசபை இயங்கி வந்துள்ளது.

குறித்த நிர்வாக சபையின் உறுப்பினர்களாக பரம்பரை தர்மகர்த்தா பூசை, முகாமைத்துவ உரித்தாளர்களான எம் இருவருக்கும் மேலதிகமாக 10 நபர்கள் குறித்த உறுதியில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் பின்வருவோர்களாவார்.

01. கார்த்திகேசு சின்னத்துரை 02. சுவாமிநாதர் நாகலிங்கம்
03. வயித்திலிங்கம் முத்தையா 04. அம்பலவாணர் நடராசா
05. வே. சின்னத்தம்பி நாகலிங்கம் 06. ஜயம்பிள்ளை பெரியதம்பி
07. சபாபதி சுப்பிரமணியம் 08. சின்னத்தம்பி முத்தையா
09. சின்னப்பு இரத்தினம் 10. மயில்வாகனம் நல்லதம்பி

குறித்த3615ஆம்இலக்கஉறுதியின்வாசகங்களின்பிரகாரம்மேற்குறித்தவர்கள் ஆண் சந்ததியினரே நிர்வாக சபை உறுப்புரிமையையும் மாதாந்த பூசை உரித்தையும் கொண்டிருக்க அருகதை உடையவர்கள்.

தற்போதைய நிர்வாக சபை உறுப்புரிமை மேற்படி நியதிக்கிணங்க ஒழுங்குறுத்தி அமைக்கவேண்டிய அவசிய அவசர தேவை எழுந்துள்ளது.

எனவே மேற்குறித்த 10 நபர்களின் பரம்பரை வழிவரு ஆண் சந்ததியினர் அவர்களின் ஸ்தானித்திற்கு வருவதற்கான உரித்தை தாம் கொண்டிருப்பவராளாக இருந்தால் எமக்கு தமது உரித்தை எழுத்தில் விளக்கி தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய நிர்வாகம் சிறப்பாக நடாத்தப்பட வேண்டிய் தேவை இருப்பதனால் உரித்தைக் கோருபவர்கள் ஆலய விடயத்தில் தொடர்ச்சியுற அக்கறையை வெளிப்படுத்தி வந்தவர்களாகவும் இருத்தல் அவசியம்.

இவ் அறிவித்தலின் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் தமது உரித்து வெளிப்படுத்தலை எமக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

அங்ஙனம் பரம்பரை உரித்தின் அடிப்படையில் நிர்வாக சபை உறுப்புரி மையும்மாதாந்தப் பூசை உரித்தும் முதற்கண் ஒழுங்குறுத்தி அமைக்கப்பட்டதன் பின்னர் தேவைப்படின் குறித்த 3615 ஆம் இலக்க உறுதியின் வாசகங்களுக்கு முரனில்லாத வகையில் நிர்வாகசபை உறுப்புரிமையின் விரிவாக்கம் பரிசீலிக்கப்படும் விரிவாக்கம் பரிசீலிக்கப்படும்.

பரம்பரை உரித்தைக் கோருபவர்கள் விதிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் தமது நிலைப்பாட்டை எழுத்தில் தெரிவிக்கத் தவறுமிடத்து அவர்கள் தமது உரிமையைக் கையுதிர்த்து விட்டதாக கருதப்படுவர்.

**1. சபாரத்தினம் இராசதுரை, 2. இராசரத்தினம் குகராஜா**
**(பரம்பரை வழிவரு தர்மகர்த்தா, முகாமையாளர், பூசை உரித்தாளர்கள்)**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி**

# மரண அறிவித்தல்



## திருமதி பராசக்தி மனோகரன்


பொன்னாலை பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி மனோகரன் கடந்த (05.04.2019) வெள்ளிக்கிழமை பிராஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாமதேவா - மங்கையற்கரசி தம்பதி யினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் நாகரத்தினம் (ராசம்மா) தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசா மனோகரனின் பாசமிகு மனைவியும் சஞ்சிகா, சஞ்செயன், அருஞ்செயன் ஆகியோரின் அன்பு தாயும் அமரசிங்கம் திலக்ஷனின் மாமியும் காலஞ்சென்ற கருணாகரன் ஞானசக்தி, மற்றும் அருள்சுப்பிரமணியம் யோகசக்தி, சிவராஜா கிருபாசக்தி, வாமதேவா இராமகிருஷ்ணன், சிவகுருநாதன் தனசக்தி, வாமதேவா பாலசுப்பிரமணியம், அருள்சக்தி, காலஞ்சென்ற வாமதேவா ஞானகணேசன் (பாபு) ஆகியோரின் சகோதரியும் புவனேஸ்வரி, புவனேந்திரன், தெய்வேந்திரன், தேவிமனோகரி, அம்பிகாதேவி, கெங்காதேவி, யமுனா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2019) புதன்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சிவராஜா அனுராஜ் (பெறாமகன்)**

தோற்றம்
15 . 06 . 1951



மறைவு
08 . 04 . 2019

## கணபதிப்பிள்ளை சிவகுமாரன்

**(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் - யாழ்போதனா வைத்தியசாலை)**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவகுமாரன் நேற்று (08.04.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாதரோக வைத்தியர் கணபதிப்பிள்ளை ருக்மணி தம்பதியின் சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் • கமலேஸ்வரியின் அன்புக்கணவரும் அனுஷா, சசிகரன் (டுபாய்), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவகன், ஜெனார்த்தனி ஆகியோரின் அன்பு மாமனாரும் லாவன்யா, ஹர்ஷாவர்தன், சஜனிகா ஆகியோரின் அன்பு பேரனும் செல்லத்துரை, சுந்தரேசன் (கனடா), சோமசேகரம், அமிர்தவல்லி (இந்தியா), சுந்தரவல்லி, சவுந்தரவல்லி (பிரான்ஸ்), காலஞ்சென்ற முரளிதரன், வாசுதேவன் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**புலோலி தெற்கு,**
**புலோலி.**
**021 226 1245**
**076 411 6333**

# மன்னாரிலும் கடும் வறட்சி 10, 236 குடும்பங்கள் பாதிப்பு

*மன்னார், ஏப். 9*

மன்னார் மாவட்டத்தில் கடும் வறட்சியால் பத்தாயிரத்து 236 குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடும் வெப்ப நிலவும் நிலையில் தீ விபத்துக்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு முன்னாயத்தச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்து பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் திணைக்களங்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கனகரெட்ணம் திலீபன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா ஏற்கனவே பாதிப்பப்பட்டிருந்த நிலையில் மன்னாரும் வறட்சிப் பாதிப்புக்கு உள்ளான மாவட்டமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இடர்முகாமைத்துவ மத்தியநிலையம் அந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட 2ஆயிரத்து124 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். குடிதண்ணீர் இல்லாமை, கால்நடைகளுக்கு தண்ணீர் இல்லாமை, மேட்டுநிலப் பயிர்ச் செய்கை போன்ற பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன என்று நானாட்டான் பிரதேச செயலாளர் சிறீஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான பணிகள் உடனடியாகவே இடம்பெற்று வருகின்றன என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

ஏற்கனவே வவுனியா, யாழ்ப்பாணத்துக்குட்பட்டு வடக்கில் 33 ஆயிரத்து 593 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நானாட்டான் பாதிப்பையும் உள்ளடக்கி நேற்றைய பாதிப்பு நிலைப் படி 40ஆயிரத்து 607 பேர் வடக்கில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடுமுழுவதும் 3 இலட்சத்து 21ஆயிரத்து 425 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-21,213)

## மதுஷின் சகாக்கள் கைது

கொழும்பு, ஏப்.9

டுபாயில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல போதைப் பொருள் வர்த்தகரும், பாதாள உலகக் கும்பலின் தலைவருமான மாதுந்துரே மதுஷின் சகாக்கள் இருவர் நேற்று இலங்கைத் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யு.எல். 226 என்ற விமானத்தில் இன்று மொஹமட் நையீம், மொஹமட் முபா ஆகிய இருவரும் வந்தபோதே குற்றத் தடுப்பு பிரிவினர் அவர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் 37 மற்றும் 30 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக, குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி மாகந்துரே மதுஷ் உட்பட 31 பேர் டுபாயில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (எ)

## இலங்கை சிறுவன் பின்லாந்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.9

பின்லாந்தில் நடந்த விபத்தில், மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த குணசேகரம் லோகபாலா என்ற சிறுவன் உயிரிழந்துள்ளார். புலம்பெயர்ந்து பின்லா ந்து நாட்டில் வசித்து வரும் சிறுவன் கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி வாகனத்தில் சென்றபோது விபத்துக்குள் படுகாயமடைந்திருந்தான் மூளைச்சாவு அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)



## செம்மணியின் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவப் பதாகைகள் கிழிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு காட்சிப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ வாசகங்கள் அடங்கிய பாதாகைகள் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் பகுதியில் நீண்ட காலமாக உள்ள சைவ ஆலயம் ஒன்றுக்கு அருகிலும், சற்றுத் தொலைவிலும் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் கிறிஸ்தவ வாசகங்கள் அடங்கிய பாதாகைகள் நடப்பட்டிருந்தன. அதனால் நேற்றுமுன்தினம் இரவு அங்கு பதற்றமான நிலமை ஏற்பட்டிருந்தது. பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

அந்தப் பாதாகைகள் நேற்றுக் காலை இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன. (எ)

## போதைப் பொருள்களுடன் பெண் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஏப்.9

கொழும்பை அண்டியப் பகுதிகளான ரத்மலானை, படோவிட , நாகஹமுல்ல ஆகிய பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளை ப்புகளின் போது ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்மலானை பகுதியில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் 5 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ரத்மலானைபகுதியைச் சேர்ந்த 53வயதுடைய ணொவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதே பிரிவைச்சேர்ந்த படோவிடவை அண்டிய பகுதியில் 20 கிராம் 65 மில்லி கிராம் ஹெரோய்னுடன் கல்கிஸ்ஸைப்பகுதியைச்சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகஹமுல்லப் பகுதியில் 203 கிராம் 234 மில்லி கிராம் ஹெரோய்னுடன் நாகஹமுல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவர் கொழும்பு குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-71)

## எழுத்தாளர் ஊக்குவிப்பு நிதி வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.9

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டம் - 2019 இன் கீழ் பிரதேசம் சார்ந்த கலைஞர்களின் ஆக்கங்கள், நூல் வெளியீடுகளை ஊக்குவிக்கும் முகமாக ஒரு கலைஞருக்கு ஊக்குவிப்பு நிதியாக ரூபா பத்தாயிரம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் எழுத்தாளர்களில் இதுவரை இந்த ஊக்குவிப்பு நிதியைப் பெறாதவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறியத்தரப்படுகிறது. (ஐ-9)

## மாகாணத் தேர்தலை நடத்த தயாராகவே உள்ளது ஐ.தே.க.

*அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 9

விகிதாசார முறையில் மாகாண சபைகளை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் தயராக உள்ளது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய முறைமையில் தேர்தலை நடத்துவதாக இருந்தாலும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். இது இலகுவான காரியமாகும். இந்த மாத இறுதிக்குள் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது போனால் அடுத்த ஆண்டில்தான் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும்.

மாகாண் சபைத் தேர்தலைப் புதிய முறையில் நடத்த வேண்டுமானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்படச் சில கட்சிகள் பிடிவாதமாக இருந்தமையால் தான் உரிய காலத்தில் தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்படும் - என்றார்.

அதேவேளை, தேர்தலை எந்த முறைமையிலேனும் நடத்த வேண்டும் என்று மகிந்த தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். (எ)

## புதிய நீர்த் தேக்கங்களை அமைப்பதற்குத் திட்டம்

*நீர்நிலைகள் முகாமைத்துவ பிரிவு தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.9

ஈர வலயங்களில் புதிய நீர்த் தேக்கங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று நீர்ப் பாசனத் திணைக்களத்தின். நீர்நிலைகள் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

நிலவும்வெப்பம் காரணமாக ஈர வலயங்களில் புதிய நீர்த் தேக்கங்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஈர வலயங்களில் அதிகளவு உணவு உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் வறட்சி காரணமாக உணவு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மாகாவலி மற்றும் களனி ஆற்றை அண்மித்த பகுதிகளில் புதிய நீர்த்தேக்கங்களை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (எ)

## 20 நிறைவேறாவிட்டால் ஜே.வி.பி. களமிறங்கும்

கொழும்பு. ஏப்.9

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் முயற்சிகள் தோற்றால் அடுத்த அரச தலைவர் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்காகவே மக்கள் விடுதலை முன்னணி அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு பாதுகாப்பு

கொழும்பு, ஏப்.9

புத்தாண்டை முன்னிட்டு கொள்வனவுக்குச் சந்தைக்குச் செல்லும் பொதுமக்களுக்காக சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாடு முழுவதும் இந்த நடவடிக்கைகளில் சிவில் உடையில் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்- சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சந்தைக்கு வருவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் இந்தச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)





அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு அரியாலை திறந்தவெளி அரங்கில் நேற்றுமுன்தினம் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடத்தப்பட்டது. (23)

# அருவக்காட்டு ஆர்ப்பாட்டம்: தலைமை தாங்கியவர் கைது

*கொழும்பு, ஏப். 9*

*கொழும்பு குப்பைகளை புத்தளம் அருவாக்காட்டில் கொட்டும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மாணவர்களை ஈடுபடுத்தி கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கிய இளைஞன் ஒருவரை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

பாடசாலை மாணவர்களை ஒன்றுதிரட்டி, போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 20 வயதுடைய குறித்த இளைஞனைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் முதன்மை அஞ்சல் நிலைய சுற்றுவட்டத்தில் இருந்து பேரணியாகச் சென்று புத்தளம் கொழும்பு முகத்திடல் வரை கோஷங்களை எழுப்பியவாறு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, புத்தளம் கொழும்பு முகத்திடலில் வீதியை மறித்து போராட்டம் நடத்தியதால் சில மணி நேரம் புத்தளம் - கொழும்பு முதன்மை வீதியூடனான போக்குவரத்துக்குத் தடைப்பட்டதாகவும், இதன் பின்னர் தமது தலையீட்டுடன் போக்குவரத்து வழமைக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் பொலிஸார் மேலும்தெரிவித்தனர். (து)

## ஆஸ்திரேலியா தீ விபத்தில் இலங்கையர் படுகாயம்

ஆஸ்ரேலியாவின் மெல்பேர்னிலுள்ள இரசாயன தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். விக்னேஸ்வ ரன் வசந்தராஜா என்ற புகலிடக் கோரிக்கையாளரே படுகாயமடைந்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள விக்னேஸ்வரன், உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட விக்னேஸ்வ ரனின் மருத்துவ செலவுக்காக 13 ஆயிரம் டொலருக்கும் அதிக பணம் புலம்பெயர் தொழிலாளர்களால் திரட்டப்பட்டுள்ளது என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

## சமூக விஞ்ஞான போட்டியில் விடத்தற்பளை கமலாசினி


*வித்தியாலயம் சாதிப்பு*

சாவகச்சேரி,ஏப் 9

2018ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய மாணவர்கள் தென்மராட்சி வலயத்தில் ஆறு இடங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

அவர்களில் விவரம் பின்வருமாறு சி.ஜனகன் தரம் 10 தேசியமட்டம் 2 ஆம் இடம், கு. சரண்யா தரம் 6 அகில இலங்கை மட்டம் 3 ஆம் இடம், சொ. மாதுளன் தரம் 6 அகில இலங்கை மட்டம் 9 ஆம் இடம், ச. சேனுஜா தரம் 7 - அகில இலங்கை மட்டம் முதலாம் இடம், சி.ஜனகன் தரம் 10 - அகில இலங்கை மட்டம் 2ஆம் இடம்.

ஜோ.யஜித் தரம் 10 - அகில இலங்கை மட்டம் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ஐ-9)



## பெருந்திருவிழா

தென்மராட்சி, ஏப்.9

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேசத்தில் மிகப் பழைமை வாய்ந்த கைதடி கிழக்கு வீரகத்தி விநாயகர் கோயில் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும்நடைபெறும். இக் கோயிலில் சமதள சம உயர இரட்டைக் கோபுரங்கள் உள்ளமை சிறப்பம்சமாகும். (ஐ-9)

## புதிய செயலர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.9

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் புதிய செயலராக சுப்றா தரத்தைச் சேர்ந்த ப.விமலதாஸ் கடந்த முதலாம் திகதியில் இருந்து கடமைகளைப் பெறுப்பேற்றுள்ளார்.

வடக்கு மாகாண முதன்மை செயலர் அலுவலகத்தில் முதன்மை முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய ப.விமலதாஸ் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் செயலராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை காரைநகர் பிரதேச சபைக்கு சுப்றா தரத்தைச் சேர்ந்த ப.பாலரூபனும், சுன்னாகம் பிரதேச சபைக்கு சுப்றா தரத்தைச் சேர்ந்த ச.உருத்திரபவனும் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர். (ஐ-50)

## கொடியேற்றம்

அனலைதீவு, ஏப். 9

அனலைதீவு சிறிசங்கர நாதர் மகாகணபதிப் பிள்ளை யார் கோவில் வருடாந்த பெருந் திருவிழா கொடியேற்றத்துடன் கடந்த சனிக்கி ழமை ஆரம்பமாகியது.

பத்து தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினமான ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். பிரம்மசிறி உ.திலகேஸ்வ ரக் குருக்கள் தலைமையில் பெருந்திருவிழா கிரியைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

### பங்குனி இறுதித் திங்களில்

# பன்றித் தலைச்சி அம்மன் கோவிலில் சிறப்புற நடந்த பொங்கல் வழிபாடுகள்

சாவகச்சேரி, ஏப். 9

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் இறுதித் திங்கள் என்பதால் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவிலில் அடியார்கள் ஆயிரக்கணக்கானோர்கூடி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

பாடசாலைகள் விடுமுறை என்பதாலும் அடியார்களின் தொகை அதிகரித்திருந்தது.

பொலிஸார் தம்மாலான முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் அடியார்களின் நெருக்குதலைக் கட்டுப்படுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் கோயிலின் நாலாபுறமும் பொங்கல் வைத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதில் அடியார்கள் ஈடுபட்டனர். காலை 8 மணிக்குப் பின்னர் அடியார்களின் வருகை அதிகரித்து அனைத்து வீதிகளிலும் பொங்கலில் ஈடுபட்டனர்.



மு.ப.10 மணி தொடக்கம் தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள் ஆட்டக் காவடிகள், பாற்செம்புகளுடன் அடியவர்கள் கோயிலுக்கு வரத் தொடங்கினர். கோயிலின் நான்கு வீதிகளும் கடும் வெயிலுக்கு மத்தியிலும் அடியவர்களால் நிறைந்தன.

கோயில் வளாகத்துக்கு வெளியே வாகனங்கள் நிறுத்த இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் அங்கு இடநெருக்கடி ஏற்பட்டதால் கனகன்புளியடி, புத்தூர் வீதிகள் வாகனங்களால் நிறைந்தன.

பொங்கல் படைக்கும் இடத்தில் இடம்பிடித்து படையல் செய்வதற்கு அடியவர்கள் அலைமோதியவாறு காணப்பட்டனர்.

மதியம் கோவிலின் அனைத்துப் பகுதியிலும் குளையல் சாதம் விநியோகம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்ததிருந்தது.

### திருட்டு

இதேவேளை, அடியார்களின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து திருடர்களின் கைவரிசையும் இடம்பெற்றுள்ளது.

தங்க நகைகள், கவரிங் நகைகள் போன்றவை பெருமளவில் திருடப்பட்டுள்ளன. சங்கிலிகள் கைச் சங்கிலிகள், குழந்தைகளின் காப்புகள் மற்றும் அலைபேசிகள் திருட்டுப் போயுள்ளன என்றும் தவறியுள்ளன என்றும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கண்டெடுத்த நகைகள், அலைபேசிகள், வாகன ஆவணங்கள் போன்றவை ஆலய அறிவித்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. பங்குனித் திங்கள் வழிபாடுகளின் இறுதி நாள் வழிபாடுகள் அதிகமான அம்மன் கோவில்களில் மட்டுமன்றி ஏனைய கோவில்களிலும் இடம்பெற்றன. வடக்கில் அதிகமான கோவில்களில் நேற்று பங்குனித் திங்கள் வழிபாடுகள் இடம்பெற்றன. (து-9-131159)

# ஏழைகளுக்கு ஆலயங்கள் காணி வழங்கவேண்டும்

## பிரதேச செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 9

இந்து ஆலயங்களின் பெயரிலுள்ள காணிகள் காணியற்ற ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டும். காணிகளை ஆலயங்கள் கைப்பற்றி அதனைப் பயன்படாமல் வைத்திருப்பது இந்து மதத் தத்துவத்துக்கு முரணானது. காணியற்றவர்களின் சுபீட்சமான வாழ்வுக்கு ஆலயத்துடன் தொடர்புபட்ட பரிபாலன சபையினர் தர்மகர்த்தா, சபையினர் காணிகளை முறைப்படி வழங்கி உதவ வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தெரிவித்தார்.

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோவில் அறக்கட்டளை ஆரம்பநிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்றது. சின்மயா மிசன் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் அறக்கட்டளையை புதிதாக ஆரம்பித்து வைப்பதற்காக அமெரிக்காவின் வொஷிங்டனிலிருந்து வருகை தந்த நிதியத்தின் தலைமை அமைப்பாளர் எந்திரி. ஞானசந்திரமூர்த்தி சின்னையா நிதியத்தை ஆரம்பித்துவைத்தார்.

சுதர்சன் மேலும் தெரிவித்ததாவது:

இன்று இந்து மத கோவில்கள் பல தமது நிலையை மறந்து ஆலயத்தின் தத்துவங்களை இழந்து நீதிமன்றங்களில் நிற்கின்றன.

இந்த அவலமான நிலை மாற வேண்டும். இன்று வீடற்றவர்களுக்கு வீடு வழங்க பிரதேச செயலகங்கள் தயாரான போதும் ஏழைக் குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் இல்லை. அவர்கள் கல்வி கற்கும் சிறு குழந்தைகளுடன் வேறு வசதியின்றி அல்லல்படுகின்றனர். இவ்வாறான வறிய குடும்பங்களுக்கு ஆலயத்தின் பெயரால் காணிகளை வைத்திருப்போர் பகிர்ந்து வழங்கி முன் மாதிரியாக வாழுங்கள்.

காணி பகிர்ந்து வழங்க முடியாதவர்கள் காணியைப் பகிர்ந்து வழங்கக்கூடிய மனம்படைத்த பரோபகாரிகளிடம் ஆலய சபையை ஒப்படையுங்கள். இதன் மூலம் நல்லநிகழ்வுகள் இடம்பெறும் -என்றார்.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ் உரையாற்றுகையில்;

அறநெறி அமைப்புக்கள் கிராமங்கள் தோறும் உருவாக வேண்டும். இதன் மூலம் இளைய சமுதாயம் முன்வந்து தலைமைத்துவ பண்புகளை கையிலெடுக்க வேண்டும்- என்றார். (த-50)

# ஆசிரிய தரத்துக்கு டிப்ளோமா: ஆசிரியர்கள் குற்றச்சாட்டு

கொடிகாமம், ஏப்.9

வடக்கு மாகாணத்தில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாட ஆசிரியர் சேவை 3 1 (அ) தரத்துக்கு மேலதிகமாக வழிகாட்டலும் ஆலோசனையும் துறையில் ஒரு வருட டிப்ளோமா கேட்கப்பட்டுள்ளது என்று குறித்த ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

இதற்கு உரிய தீர்வு வழங்கவேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். நாட்டின் ஏனைய பகுதிகளில் தேசிய மற்றும் சில மாகாண பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாட ஆசிரியர் சேவை 3 1 (அ) தரத்துக்கு சமூகவியல் பட்டதாரிகள் நேரடியாக உள்வாங்கப்பட்டிருந்தனர் எனினும், வடக்கில் டிப்ளோமா கோருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஒரு நாட்டிலே குறிப்பிட்ட ஆசிரியர் சேவைத் தரத்தில் குறிப்பிட்ட பாடத்துறைக்குச் சமூகவியல் பட்டதாரிகளிடமிருந்து தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் வேறுபட்ட கல்வித் தகைமைகளை கோருவது நியாயமானதா?

ஏற்கனவே வடக்கில் குறித்த சேவைத்தரத்தில் குறித்த பாடத்துறைக்காக நேர்முகத் தேர்வில் சமூகவியல் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். இறுதியாகக் கல்வித்தகைமை பிரச்சினையில் பரீட்சை இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்தும் சமூகவியல் பட்டதாரிகளைப் புறக்கணிக்கும் வகையிலேயே சமூகவியல் பட்டதாரிகளுக்கு கல்வித்தகைமைகளை அதிகரித்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சமூகவியல் பட்டதாரிகளுக்கு நியாயமான பதில் கிடைக்காத வரை பரீட்சையை வைப்பது பொருத்தமற்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர். (த-159)

# அளகொல்லை விநாயகருக்கு இன்று கொடி

யாழ்ப்பாணம் அளவெட்டி அளகொல்லை விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 17ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் அதற்கு அடுத்தநாள் முற்பகல்10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபை தெரிவித்தது. (த-63)

# சிறுவர், இளையோருக்கான இலக்கியப் பேரவை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 9

சிறுவர்கள் மற்றும் இளையோருக்கான இலக்கியப் பேரவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது.

இளையோருக்கான நூல்கள் பன்னாட்டுச்சபையின் இலங்கைக் கிளை, கல்வி அமைச்சு, தேசிய நூலக அமைப்பு, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் சேவைப் பிரிவு, தேசிய நூலக மற்றும் ஆவணங்களைத் தயாரிக்கும் சேவை சபை, 'ரூம் டு ரீட்' அமைப்பு ஆகியன இணைந்து மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலக்கியப் பேரவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சிறுவர்கள், இளையோர்களை வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்கள் சமூகவிரோத செயற்பாடுகளில் வழிதவறிச் செல்வதனைத் தடுத்துக்கொள்ள முடியும். அதனை நோக்காகக் கொண்டே இந்த இலக்கியப் பேரவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேரவைக் கூட்டங்களை வருடாந்தம் இருதடவை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முயற்சியில் ஆர்வமுள்ளவர்கள் தம்முடன் இணைந்து செயற்பட முடியும் என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றுகையில்,

சிறுவர்கள் மற்றும் இளையோருக்கான இலக்கியப் பேரவை இலங்கையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு முக்கிய நிகழ்வு.

இதனூடாக இலக்கிய நூல்களை மதிப்பீடுசெய்வதைத் தூண்டுதல், வாசிப்பை ஊக்குவித்தல் என்பவற்றுக்கான வாய்ப்புக்கள் உருவாகும். நாட்டில் இளையோர் சிறந்த குடிமக்களாக உருவாவதற்கும் இது துணை நிற்கும் என்று நம்புகின்றேன் - என்றார். (த-61)



## வெப்பத்தின் கொடூரமா?

# பற்றி எரிந்தது வைக்கோல்

காரைநகர், ஏப். 9

யாழ்ப்பாணம், காரைநகர்ப் பகுதியில் அறுவடையின் பின்னர் விடப்பட்டிருந்த வைக்கோல் தீப்பற்றி எரிந்துள்ளன. நேற்று முன்தினம் நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்தத் தீ கட்டுப்படுத்தமுடியாது இரவு 8 மணிவரை எரிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

சுட்டெரிக்கும் வெப்பமான காலநிலை நிலவுவதால் தீ ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

காரைநகர் நட்டுப்பாலி, சல்லை என்றும் இடத்திலுள்ள வயலில் தீ பரவ ஆரம்பித்தது. அறுவடை முடிந்து சூடு அடித்து வயல்களில் போடப்பட்ட வைக்கோல் தீ பற்றியது. அது அங்குள்ள ஏனைய குவியல்களிலும் பரவ ஆரம்பித்தது.

அந்தப் பகுதி கிராம அலுவலர் அது பற்றி காரைநகர் பிரதேச சபைக்கு அறிவித்தார். எனினும் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. இரவு 9மணிவரை வயல்கள் எரிந்து கொண்டே இருந்தன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். தீ வீடுகளுக்குள் பரவாதிருக்க ஈரமான சாக்குகளைப் போட்டு தடுக்கப்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர்.

"கிராம அலுவரின் அறிவித்தலுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்றேன். தீ பற்றியிருந்தது. ஞாயிற்றுக் கிழமை என்பதால் பிரதேச சபையில் தண்ணீர் பவுசரைப் பெறுவது சிரமமாக இருந்தது. இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு அழைத்தேன் பதில் கிடைக்கவில்லை. மக்களே அங்கு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இன்று(நேற்று) தவிசாளருடன் பேசி, வறட்சியான கால நிலையில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் தண்ணீர் பவுசர், மற்றும் சாரதியை கடமையில் வைத்திருப்பது என்று தீர்மானித்துள்ளோம்" என்று காரைநகர் பிரதேச சபையின் உபதவிசாளர் தெரிவித்தார். (த-21,26)



யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நிலவும் அதிக வறட்சியின் காரணமாக அதிக பழவகை மற்றும் இளநீர் விற்பனை இடம்பெறுகின்றதைக் காண முடிகின்றது. தாவடியில் அமைந்துள்ள எரிபொருள் விற்பனை நிலையம் முன்பாக நடமாடும் பழவகை வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவரை படத்தில் காணலாம். (ஜ-105)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கலட்டி சிறி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி உற்சம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

முற்பகல் 10.30 மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டப பூசையுடன் விநாயக பெருமான் வீதி வலம் வருவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப் 9

கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பரந்தனில் ஒருவர் 5ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் சந்திக்கு அருகே 2.40 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது என்றும், சந்தேக நபர் தருமபுரத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக நடவடிக்கைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-7)

# அலைபேசி செயலி வடிவமைப்பு யாழ். மாணவர்கள் சாதனை

*யாழ்ப்பாணம், ஏப்.9*

அலைபேசி செயலி வடிவமைப்பு போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் பரமேஸ்வரன் பிரவீனன், அவரது சகோதரி தர்ஷிகா பரமேஸ்வரன் இருவரும் இணைந்து தயாரித்த கணித செயன்முறை செயலி முதலிடத்தைப் பெற்றுள்ளது.




கணிப்பான் (கல்குலேற்றர்) சாதனத்தின் தொழிற்பாட்டுக்கு மேலதிகமாக தரவுகளைப் பயன்படுத்திப் பெறும் விடையுடன் செய்கை வழித் தரவுகளையும் ஒரே நொடியில் காண்பிக்கும் வகையில் இந்தச் செயலியை மாணவன் பிரவீனனுன் அவரது சகோதரியும் இணைந்து வடிவமைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

டயலொக் நிறுவனம் நடத்திய அலைபேசி செயலி வடிவமைப்பு 2018ஆம் ஆண்டுக்கான போட்டி விதிகளின் படி அவர் தனிப்பட இந்தச் செயலியை சமர்ப்பிக்க முடியாத நிலையில் பாடசாலையில் சக மாணவர்களின் உதவியைக் கோரினார். எனினும் எவருமே முன்வராததால் பிரவீனன் தனது சகோதரி தர்க்ஷிகாவை தனது குழுவில் இணைத்து செயலியை உருவாக்கினார் என்று கூறப்படுகிறது. செயலி சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் டயலொக் நிறுவனத்தால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்விலும் தமது செயலி தொடர்பில் முழுமையான விளக்கத்தை இருவரும் முன்வைத்தனர்.

இந்த நிலையில் தேசிய மட்டத்தில் 11 பாடசாலை அணிகள் தமது செயலியை முன்வைத்திருந்தன. இறுதிப் போட்டி கொழும்பு றோயல் கல்லூரியில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் 11 அணிகளில் முதலாமிடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சுவீகரித்தது. செயலியை வடிவமைத்த மாணவன் பரமேஸ்வரன் பிரவீனன், அவரது சகோதரியான மாணவி தர்ஷிகா பரமேஸ்வரன் இருவரும் டயலொக் அப் சலஞ்சர் 2018 கிண்ணைத்தை சுவீகரித்தனர். அவர்களுக்கு 3 லட்சம் ரூபா பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. மாணவர்கள் இருவருக்கும் பாராட்டுக்கள் குவிகின்றன. அத்துடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் அவர்கள் பெருமை சேர்த்துள்ளனர். (ஐ-21)

## பதநீரைப் பெறமுடியும்

சாவகச்சேரி, ஏப்.9

தென்மராட்சி பிரதேசத்தில் பதநீர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பதநீர் தேவைப்படுவோர் சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் க.நாகசுபாசன் அறிவித்துள்ளார்.

பதநீரை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பதநீர் பெறுவதற்கு தினமும் சங்கத்துக்கு பெருமளவு மக்கள் வருகை தருகின்றனர். முன்கூட்டியே பதிவு செய்யும் பட்சத்தில் உரிய நேரத்தில் வழங்கமுடியுமெனவும் அறிவித்துள்ளார். (ஐ-9)

## சம்மேளன நிர்வாகம் தெரிவானது

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணம் நவாலி வடக்கு விவசாயிகள் சம்மேளன தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

சம்மேளனத்தின் தலைவராக செ.ஜெகன், செயலராக செ.நிறோஸ், பொருளாளராக திருமதி க.றூபலதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 9 பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் கமநல சேவைப் பிரிவுக்குட்பட்டதாக இந்தச் சம்மேளனம் உள்ளது. (து-50)

# நீதிமன்ற உத்தரவுப்படி நடப்பதே கேதீச்சர பிணக்குத் தீர ஒரே வழி

*திருக்கேதீச்சர திருப்பணிச் சபைச் செயலர் அறிவுரை*



மன்னார், ஏப்.9

திருக்கேதீச்சரம் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் கடந்த காலங்களில் திருக்கேதீச்சர நிர்வாகத்தினரும், மன்னார் கத்தோலிக்கத் திருச்சபையினரும் நீதிமன்றங்கள் மூலம் செய்து கொண்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது.

இவ்வாறு திருக்கேதீச்சர திருப்பணிச் சபைச் செயலர் எஸ்.எஸ்.இராமகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று திருக்கேதீச்சரம் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தக் கூட்டத்தில் திருக்கேதீச்சரம் பிரச்சினை தொடர்பாகவும், காணிப் பிணக்குகள் தொடர்பாகவும் கடந்த காலங்களில் திருக்கேதீச்சர நிர்வாகத்தினர் நீதிமன்றத்தினூடாக செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி நீதிமன்றங்கள் திருக்கேதீச்சர நிர்வாகத்தினருக்கு வழங்கியிருந்த ஒப்பந்த ஆவணக் கடிதங்கள் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட்டன. அவை தொடர்பான விளக்கமும் வழங்கப்பட்டது.

அது தொடர்பாக சபைச் செயலர் தெரிவித்ததாவது:

அவர்கள் மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் உண்மையைப் பேச வேண்டும். திருக்கேதீச்சரம் வளைவு அகற்றப்பட்டமையால் எழுந்த பிரச்சினையால் எமக்கும் கத்தோலிக்க மக்களுக்குமான உறவில் எந்த பாதிப்பும் இல்லை. சமாதானம் நல்லிணக்கத்துக்கும் நாங்கள் எப்பொழுதும் தயாராகவே இருக்கின்றோம். அகற்றப்பட்ட வளைவை அந்த இடத்தில் நடுவதற்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும். கடந்த காலங்களில் திருக்கேதீச்சரம் காணிப் பிணக்குகள் மாந்தை சந்தியில் லூர்து மாதா ஆலயம் அமைவிடம் தொர்டர்பாக நீதி மன்றத்தின் மூலம் இரு தரப்பினரும் செய்து கையெழுத்திட்டுக் கொண்ட ஒப்பந்தங்களை மதித்து அந்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் இந்த பிரச்சனைகள் நீண்டு செல்வதை தவிர்த்துக்கொள்ள முடியும். - என்றார்.

இந்த கலந்துரையாடலில் ததிருக்கேதீச்சர திருப்பணிச் சபை செயலர் எஸ்.எஸ் இராமகிருஷ்ணன், மன்னார் மாவட்ட இந்து ஒன்றியங்களின் தலைவர் மருத்துவர் கதிர்காமநாதன், மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவைத் தலைவர் சிவ சிறி தர்மகுமார குருக்கள், திருக்கேதீச்சரத் தின் பிரதம குரு கருணானந்த குருக்கள், பொறியியலாளர் காந்தன், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களில் பிரதிநிதிகள், மாந்தை மேற்கு இந்து சமய பேரவை உறுப்பினர்கள் மற்றும் சிவத் தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். (எ-213)

## கற்றை நெறியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ்

கொடிகாமம், ஏப்.9

கணினிக் கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை வரணி கனடா ஒன்றியத்தின் கற்கை நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்குத் முதன்மை விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவனும், சிறப்பு விருந்தினராக வரணி மத்திய கல்லூரி அதிபர் ப.செல்வநாயகமும் கலந்து கொண்டனர்.

வரணி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையுரையையும் கற்கை நிலைய ஆசிரியர் பா.பார்த்தீபன் வரவேற்புரையையும் நிகழ்த்தினர். விருந்தினர்கள் மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினர். நன்றியுரையை கற்கைநிலைய இணைப்பாளர் எம்.எஸ்.கந்தையா நிகழ்த்தினார்.

பிரதேச சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ-159)



யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்றது.







## மாணவர்கள் மதிப்பளிப்பு

மன்னார்.ஏப்.9
மன்னார் பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலையில் கடந்த வருடம் க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்த மணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
பாடசாலையில் இருந்து 32 மாணவர்கள் தோற்றியிருந்த நிலையில் 28 பேர் கணித பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்துள்ளனர்.
இதில் எஸ்தர் டிலோஜினி 9 ஏ சித்திகளைப் பெற்று பாடசாலையில் முதலிடத்தில் உள்ளார். இவருக்கு பாடசாலை சமூகத்தால் நினைவுச்சின்னம், பத்தாயிரம் ரூபா பணம் மற்றும் ஈருருளி என்பன வழங்கிவைக்கப்பட்டன.
இதேவேளை குலேந்திரன் ஜொமில்ரன் 6ஏ 3பி சித்திகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார். இவருக்கு நினைவுச்சின்னமும் ஏழாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன.
ஏனைய 26 மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் ஜே.பிரட்லி, நானாட்டான் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி, அருட்சகோதரர்கள், பங்குத்தந்தையர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-213)

+++++



வவுனியா.ஏப்.9
க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாங்குளம் ம.வி மாணவர்கள் 22 பேரும் சைவ மகா சபையால் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் பட்டயக்கணக்காளர் தர்சன், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலர், துணுக்காய் திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் சைவ மகா சபையினர், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**
லோ.சிறீகீரன்-9ஏ,இ.கீர்த்தனா-9ஏ, ப.திரிகரன் -8 ஏ சி, தி.தினுஜன்- 8 ஏ பி,ஜெ.திலக்க்ஷன்-7ஏ பி எஸ், யா.மாதங்கி -6 ஏ 3 பி.

**தமிழ் மொழி மூலம்**
ஜெ.உமாசுதன்-9ஏ, ச.தர்சனா-9ஏ, கு.கீதாஞ்சலி-9ஏ,ப.நிருசன்- 8 ஏ பி, வ.தனுகரன்-8ஏ பி,வி.தனுஷிகா-8 ஏ பி, ம.விஜிதா -8ஏ பி, மா.நாகதர்ஷிகன் - 8ஏ பி, ஜெ.ரிச்சேர்ட்ஸ் -7ஏ 2 பி,வி.மேனகன்-6ஏ3பி,வ.லோஜிதா-6ஏ 2பி சி.

**காரைநகர் இந்துக் கல்லூரி**
ர.சயுவண்ணன்- 6ஏ3சி, பே.தமிழினி- 5ஏ2பி2சி, ம.டர்சிகா- 4ஏ3சிஎஸ், சி.அறிவரசன்- 3ஏ3பி2சி, தி.லுகிர்தன்- 3ஏ3பி2சி, ஏ.துஸ்யந்தன்- 3ஏ3பிசி, டி.நிலா- 3ஏ2பி3சி, வ.பவீனா- 3ஏபி3சிஎஸ், வி.புருசோத்தமி- 3ஏசி3எஸ், தே.ஜென்சிகா- 2ஏ5பிசிஎஸ், பு.ஜெசிகானி-2ஏபி3சி2எஸ், ம.கஜானி- 2ஏ2பிசி4எஸ், அ.கோபிகா- 2ஏ2பி3சிஎஸ், சு.லக்சிகா- 2ஏ3சிஎஸ், க.பூர்விகா- 2ஏ3பி3சி.

**மல்லாகம் மகா வித்தியாலயம்**
கு.பவித்திரன்- 7ஏபிசி, அ.தனுசன்-6ஏ2பிசி, பா.சயந்தன்- 5ஏ2பி2சி, ர.சரண்- 4ஏ2பிசி2எஸ், அ.டிலக்சனா- 4ஏபி4சி, அ.மதுசாளினி-3ஏ2பி4சி, தே.அபிமெலினா- 3ஏ3பி3சி, யோ.டினோயா- 2ஏ3பி2சி2எஸ், த.டிலானி- 2ஏ2பி2சி3எஸ், றொ.ஜெனனி- ஏபி4சி3எஸ், த.டல்சிகா- ஏ2பி3சி3எஸ், அ.ஆயிஷா-ஏ3பி2சி3எஸ், ம.கனுஸ்ரா- ஏ3சி5எஸ், நெ.அபிசா- ஏ3சி5எஸ், ம.மதுராஜ்- ஏபி4சி2எஸ், வே.டயன்சன்- ஏபி3சி3எஸ், வ.சங்கவி-ஏ2பிசி3எஸ், வி.துசாந்- பி3சி4எஸ், வி.நிஷாந்- பி4சி3எஸ், தா.கார்த்திகா-5சி3எஸ், அ.நிதுர்சா-4சி4எஸ், த.பிரபாலினி- பி3சி3எஸ், நா.நிக்சன்- பி2சி4எஸ்,ம.நிலானி- பி2சி4எஸ், அ.ஜென்சீவன்- 5சி2எஸ், ஞா.வானுஜன்- 3சி4எஸ், ஜெ.கஜீபன்-4சி2எஸ், ச.பிரதாப்பு-3சி3எஸ், இ.கிருஷ்ரிகா- 3சி3எஸ்.

**குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்**
தே.பிரியங்கன்- 2ஏ2பி4சிஎஸ், வி.அன்ரனி- ஏ3பி3சி2எஸ், த.அபிஷாக்-பி3சி3எஸ், யோ.நிதர்சன்-பி3சி2எஸ்

**பெரியபுலம் மகா வித்தியாலயம்**
ற.கஹம்சிகா- 7ஏபிசி, கு.பிருந்தா-2ஏ3பி3சிஎஸ், ப.கிருஷ்ணவேணி-2ஏ3பி2சி2எஸ், வி.சதுர்சனா-2ஏபி5சிஎஸ், த.ரேவதி-2ஏபி3சி2எஸ், ப.லினோதன்-2ஏ6சி, ந.கிருத்திகா- எபி4சி3எஸ், ஜெ.கேதாராணி-ஏ6சி2எஸ், ஆ.பார்த்தீபன்-பி5சி3எஸ், க.கஜானனி-பி5சி3எஸ், இ.லிதியா- பி4சி4எஸ், நி.கௌசி- பி4சி3எஸ், த.டிமல்றொக்சன்- பி4சி2எஸ், ஈ.சயங்கன்-5சி4எஸ், வி.நர்சிகன்- 6சி2எஸ்.

## மன்னார் வலயத்தில் 15 மாணவர்களுக்கு 9ஏ

மன்னார்.ஏப்.9
கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரணப் பரீட்சை முடிவுகளின்படி மன்னார் கல்வி வலயத்தில் ஏழு பாடசாலைகளில் 15 மாணவர்கள் 9ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.
இதன் பிரகாரம் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ரி.விதுசன் அலோசியஸ் டயஸ் என்ற ஒரு மாணவனும், மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் ஜெ.ஜெனுஷா, ஆர்.சுவேத்தா,ஏ.இம்மானுஏலி, ஜெ.சனோலின், பி.மெற்றில்பீயுலா, எஸ்.சன்சோனிக்கா ஆகிய ஆறு மாணவிகளும், மன்னார் புனித ஆன்ஸ் மத்திய மகா வித்தியால யத்தில் எஸ்.விஜிலன் றெவல் என்ற ஒரு மாணவனும், மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் எஸ்.உதர்சன் என்ற ஒரு மாணவனும்,மன்னார் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஏ.சார்லக் என்ற ஒரு மாணவனும்,மன்னார்- புத்தளம் றிசாட் பதியுதீன் மகா வித்தியாலயத்தில் எம்.என்.எவ்.நவ்ரின், எ.எவ்.நஸ்பா பானு, எம்.பி.எவ்.றிஸ்கா,எம்.எவ்.அவ்ரா என்ற நான்கு மாணவர்களும், மன்னார் பரிகாரிகண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஐ.ஈ.டிலோஜினி என்ற ஒரு மாணவியுமாக மொத்தம் 15 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளனர்.
இதில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலே கூடுதலான மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளனர்.
அத்துடன் எட்டு பாடசாலைகளில் 12 மாணவர்கள் தலா 8ஏ பெற்றுள்ளனர்.
இதன்பிரகாரம் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் ரி.எல்.டிசாந்தினி 8ஏ பி, ரி.ஏ.ஐதுர்சிக்கா 8ஏ பி, ரி.ஜெயனிஷா8ஏ பி,ஆகிய மூன்று மாணவிகளும், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ரி.வினுஜன் 8ஏ பி, ஈ.லதீஸ்லாஸ் 8ஏ.பி ஆகிய இரு மாணவர்களும் மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரியில் இரு மாணவர்கள் பி.நவசோவ்மியா8ஏ பி, எஸ்சரணியா 8ஏ பி,மன்னார் முசலி மகா வித்தியாலயத்தில் பி.இருசாத் 8ஏ சி,மன்னார் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் எம்.சகாய றொசின்ரன் 8ஏ பி, மன்னார் அல்மினா மகா வித்தியாலயத்தில் எவ்.எம்.எஸ்.சிஹானா ஷன்சனி 8ஏ பி,மன்னார் கற்கடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஏ.ஜெயிசி 8ஏ பி, மன்னார் புனித.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆர்.அபிஷேக் 8ஏ சி பெற்றுள்ளனர். (ஐ-60)

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் திருமுறிகண்டி இந்துவில் 22 மாணவர்கள் சித்தி

வவுனியா.ஏப்.9
கடந்த வருடம் இடம் பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முல்லைத்தீவு திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் 22 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.
பாடசாலையில் இருந்து க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு 24 மாணவர்கள் தோற்றிய நிலையில் 22 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.
பாடசாலைக்கும் , கிராமத்துக்கும் பெருமை சேர்த்த் மாணவர்களையும் அப் பெருமைக்கு அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் அனைத்து பெற்றோர்களும் வாழ்த்துகின்றனர். (ஐ-222)

## க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் மூன்றாம் இடம்

அச்சுவேலி,ஏப்.9
க.பொ.த.சாதாரண தரம் 2018 பெறுபேறுகளின் படி வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. முதலாம் இடத்தை மன்னார் மாவட்டம் பெற்றுள்ளது என இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பகுப்பாய்வு மூலம் தெரியவந்துள்ளது.
வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களின் தரநிலையில் மன்னார் மாவட்டம் முதலாம் இடத்தையும், வவுனியா மாவட்டம் இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாண மாவட்டம் மூன்றாம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் நான்காம் இடத்தையும் ,கிளிநொச்சி மாவட்டம் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.
மன்னார் மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 3 ஆயிரத்து 638 மாணவர்களில் ஆயிரத்து 321 மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்பதற்கான தகுதி நிலையை அடைந்துள்ளனர்.
வவுனியா மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 5 ஆயிரத்து 143 மாணவர்களில்1929 மாணவர்கள் க.பொ.த.உயர்தரம் கற்பதற்கான தகுதி நிலையை அடைந்துள்ளனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 17 ஆயிரத்து 495 மாணவர்களில் 6 ஆயிரத்து 337 மாணவர்கள் க.பொ.த.உயர்தரம் கற்பதற்கான தகுதி நிலையை அடைந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 3 ஆயிரத்து 494 மாணவர்களில் ஆயிரத்து 246 பேர் க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகுதியடைந்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி இருந்த 4 ஆயிரத்து 405 மாணவர்களில் ஆயிரத்து 434 மாணவர்கள் க.பொ.த.உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதியடைந்துள்ள னர்.
நாடளவிய ரீதியில் ஐந்து லட்சத்து 18 ஆயிரத்து 184 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். 71.66வீதத்தினர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (ஐ-11)

## மாணவர்கள் மதிப்பளிப்பு

வலி.மேற்கு,ஏப்.9
யாழ்ப்பாணம் நவாலி மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தால் மதிப்பளிக்கப்பட்டனர். கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 5 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.
து.பிரிந்தா - 4ஏ 2பி 3சி, செ.லோஜிகா -3ஏ 2பி 4சி, ட.மேரிடில்சியா -3ஏ 3பி சி 2எஸ்,செ.தர்சன்-2ஏ பி 4சி 2எஸ், க.சிலக்சனா-ஏ 2பி 2சி 4எஸ் ஆகிய மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-50)

# தேசிய சாதனை நிகழ்த்திய யமீனுக்குப் பெரு வரவேற்பு



மன்னார்,ஏப் 9

மன்னார் எருக்கலம்பிட்டி புதுக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த மாணவன் எம்.வை. சஹிபுல் யமீன் மன்னார் மண்ணில் இருந்து ஜிம்னாஸ்ரிக் துறையில் உலக சாதனைக்காக தன்னை தயார் படுத்தி தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளார் இவருக்கான வரவேற்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் அல்மினா மகா வித்தியாலயத்தில் உயர்தர கலைப்பிரிவு மாணவனான எம்.வை.சஹிபுல் யமின் இவர் தேசிய ரீதியில் வரலாற்று சாதனையைபடைத்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாகநடைபெற்ற யூத் வித் ரலண்ட் போட்டியில் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 10 இளைஞர்கள் வீதம் 24 மாவட்டங்களில் 240 இளைஞர்களும் கொழும்பில் இருந்து 20 இளைஞர்களுமாக 260 இளைஞர்கள் போட்டியாளராகதமதுதிறமைகளை வெளிக்காட்டினர்.

போட்டிகளின் இரண்டாவது சுற்றில் 260 போட்டியாளர்களுக்கான போட்டிகள் இடம் பெற்றன.

3 ஆவது சுற்றுக்களில் 8 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு இறுதிச் சுற்றுக்கு தேர்வாகி இறுதிச் சுற்று கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம் பெற்றது.

போட்டியில் நடுவர்கள் பார்வையாளர்கள் முன்னிலையில் மாணவன் எம்.வை. சஹிபுல் யமீன் கண்ணாடி பெட்டிக்குள் தன்னை முழுமையாக அடைத்துக் கொண்டு பெட்டியை தண்ணீர் நிறைந்த இன்னொரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து அதன் மேல் ஐஸ் கட்டிகளை கொட்டி சுமார் 6 நிமிடங்கள் இருந்துள்ளார்.

இந்த சாதனைக்காக இவர் தேசிய ரீதியில் முதல் இடத்தை பெற்றுக்கொண்டதோடு.மகிழுந்து. உந்துருளி மற்றும் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார்.

சாதனையாளரை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மன்னார் நகர நுழைவாயிலில் இடம் பெற்றது.

இதன் போது மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன்.மன்னார் நகரசபை உறுப்பினர் என்.எம்.நகுசீன் மற்றும் மன்னார்மக்கள்இணைந்து வரவேற்றனர். (க-56)

# மாணவி ஒருவருக்கு ஈருருளி கையளிப்பு




கிளிநொச்சி, ஏப்.9

கிளிநொச்சியைச் சேர்ந்த, பொருளாதாரத்தில் நலிந்த குடும்பத்து மாணவி ஒருவருக்கு ஈருருளி ஒன்றும், புத்தகப் பை ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. மாணவியின் கற்றல் நடவடிக்கையைக் கருத்தில் கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

சுவிஸ் நாட்டில் வசிக்கும் புவனேஸ்வரன் தம்பதியரின் மகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த உதவி உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-159)

# நடுவர் சபை அமர்வுகள் நடைபெறாது

பூநகரி, ஏப்.9

பூநகரி மற்றும் சாவகச்சேரிப் பிரதேச நடுவர் சபைகளின் அமர்வுகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் புத்தாண்டு என்பதாலேயே அன்று அமர்வுகள் நடைபெறாது என்று தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 21ஆம் திகதி வழமைபோன்று அமர்வுகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)



# இனக் கொள்கை அடிப்படையில் பாடசாலைகள் இயங்கக் கூடாது

## றிப்கான் பதியுதீன் தெரிவிப்பு



மன்னார், ஏப்.9

மாணவர்களை சிறந்த முறையில் வழி நடத்த வேண்டிய பொறுப்பு பாடசாலை சமூகத்தினுடையது. பாடசாலை சமூகம் அரசியல் மற்றும் இனக் கொள்கையில் பயணிக்குமானால் எதிர்கால சந்ததிகளின் கல்வி கேள்விக்குறியாகும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், அமைச்சர் ரிசாத் பதியுதீனின் பிரத்தியேகச்செயலாளருமான றிப்கான் பதியுதீன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்டத்தில் காணப்படும் 5 தேசிய பாடசாலைகளுள் 3 பாடசாலைகளுக்கான புதிய மூன்று மாடி கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், அல் /அஸ்ஹர் தேசிய பாடசாலைக்கான ஆசிரியர் விடுதி திறப்பு நிகழ்வும், முசலி தேசிய பாடசாலையில் சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அவற்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டம் கல்வி விளையாட்டுபோன்றதுறைகளில் மிகவும் திறமையாகவும் முன்னிலையாகவும் காணப்படுகின்றது. அண்மையில் வெளியான பெறுபேறுகள் வீதங்கள் அடிப்படையில் வடமாகாணத்தில் முதலிடம் பிடித்திருக்கின்றது.

மாணவர்கள்எதிர்காலத்தலைவர்கள். பாடசாலைஎன்பதுஒரு பாடப்புத்தக அறி வை மட்டும் கொடுக்கக்கூடியதாக இல்லாதுஒழுக்கம் ஒற்றுமை மற்றைய சமூகத்தை மதிக்கும் தன்மை இனம் மதம் பிரதேசம் போன்ற துவேசங்களில் இருந்து நீங்கி சிறந்த சமூகமாக வளர வேண்டும்.

- என்றார். (எ-213)



# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,ஏப்.9

செட்டிகுளம் வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் மதிவண்ணனின் வேண்டுகோளுக்கு அமைவாக பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து கல்வியைத் தொடரும் 27 மாணவர்களை இனங்கண்டு அவர்களுடைய கல்வித்திறனை மேம்படுத்தும் நோக்கில் கற்றல் உபகரணங்கள் வெளிச்சம் அறக்கட்டளையினால் கடந்த 5 ஆம் திகதி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் நவரத்தினம், பிரதி அதிபர் மதிவண்ணன், வெளிச்சம் அறக்கட்டளையின் செயலர் தி. கார்த்திக், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-222)

# 9 ஆவது குருதிக்கொடை முகாம்

கருகம்பனைத் தமிழ் மன்றமும் சனசமூக நிலையமும், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய மாபெரும் 9 ஆவது குருதிக் கொடை முகாம் நேற்று முன் தினம் இடம்பெற்றது. கிராமத்தவர்கள், கழக உறுப்பினர்கள், இராணுவத்தினர், நலன்விரும்பிகள், அயற் கிராமத்தவர்கள் முன்னாள் போராளிகள் ஆகியோர் என 57 பேர் உயிர்காக்கும்இந்தஉன்னத பணியில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-222)

# மைதான கட்டடத்துக்கு அடிக்கல் நடல்



நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் தரணிக்குளம் கிராமத்தின் விளையாட்டு கழகத்துக்கான மைதானத்துக்கு அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு கம்பரலிய நிதி ஒதுக்கீட்டின் ஊடாக, ஆசிகுளம் தரணிக்குளம், ஸ்கைபேட்ஸ் விளையாட்டுக்கழக கட்டடம் அமைப்பதற்கு ஐந்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நேற்று முன்தினம் அடிக்கல் நடப்பட்டுள்ளது.

நிகழ்வில் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் மயூரன், பிரதேசசபை தலைவர் து. நடராஜசிங்கம், உறுப்பினர் பார்த்தீபன், தமிழ் ஈழ விடுதலை இயக்க மாவட்ட அமைப்பாளர் விஜயகுமாரன், துணை மாவட்ட அமைப்பாளர் நாகராஜன், கழக நிர்வாகத்தினர் மற்றும் கிராமமக்களும் கலந்துகொண்டனர். (க-110)

# பன்னிரண்டாயிரம் லீற்றர் குடிதண்ணீரை மருத்துவமனைக்கு வழங்கிய இராணுவம்

கிளிநொச்சி,ஏப்.9

தர்மபுரம் பிரதேச மருத்துவமனை குடிதண்ணீர் இன்றி நெருக்கடி நிலைக்கு உள்ளானபோது. 12 ஆயிரம் லீற்றர் குடிநீரை இராணுவம் வழங்கி உதவியுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பிரதேச மருத்துவமனையில் தண்ணீர் இன்மையால் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிணற்றில் நீர் வற்றியதன் காரணமாக மருத்துவமனையில் தங்கியுள்ள நோயாளிகள் முதல் மருத்துவமனையின் ஏனைய தேவைகளுக்குப் பொது மக்கள் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மாவட்ட செயலர் உள்ளிட்ட பலரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருப்பதாகவும் மருத்துவமனை அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு கரைச்சி பிரதேச சபையிடம் மருத்துவமனைக்கான தண்ணீரை வழங்குமாறு கோரிக்கை விடுத்த போதும், அவர்கள் ஒரு லீற்றர் நீருக்கு ஒரு ரூபா கோரியதாகவும், அதனை மருத்துவமனையால் வழங்க முடியாத நிலையில் மருத்துவமனை இராணுவத்தின் உதவியை நாடியது.

இதனைத் தொடர்ந்து படையினர் இயக்கச்சியிலிருந்து 12 ஆயிரம் லீற்றர் தண்ணீரை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிவரும் 12 ஆம் திகதி சிறுபோக நெற்செய்கைக்காக கல்மடுக்குளம் திறக்கப்படும் வரை நீர்ப்பற்றாக்குறை நிலவும் எனவும், கல்மடுகுளம் திறக்கப்படும் போது, மருத்துவமனையின் கிணற்றில் தண்ணீர் நிரம்பிவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-214)

## விளையாட்டுப் போட்டிகள்



வடமராட்சிகிழக்கு குடத்தனை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கிறிஸ்து நற்தூது பணியக முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

குடத்தனை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை வளாகத்தில் குரு முதல்வர் வசந்த ஆனந்தன் தலைமையில் போட்டிகள் இடம்பெற்றன. நிகழ்வில் மங்கள விளக்கை முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கணக்காளர் சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை வட்டார உறுப்பினர் தியாகலிங்கம், திருமதி கலவதி உட்பட பலரும் ஏற்றி வைத்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர்.

(ஜ-160)

### வெள்ள இடர் சிறப்புத் திட்டத்தின் கீழ்

## கிளி.யில் 1,218 வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

கிளிநொச்சி, ஏப்.9

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள இடர் சிறப்புத் திட்டத்தின் ஊடாக ஆயிரத்து 218 வீடுகளுக்கான கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் தெரிவித்துள்ளார்

கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.


இதில் நிரந்தர வீடுகள் இல்லாத மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு சிறப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டது.

இதில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு 7.5 லட்சம் ரூபா நிதியில் வீடுகளை அமைப்பதற்கான அனுமதிகள் கிடைக்கபெற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 218 வீடுகளுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்னும் வீடுகள் வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றன. குறிப்பாக வருகின்ற மாதத்துக்குள் அனைத்து வீடுகளையும் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஜ-6)

## கஞ்சா விற்றாரென பெண் ஒருவர் கைது



கிளிநொச்சி, ஏப்.9

கடையில் வைத்து கஞ்சா விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ்குழுவினர் சிறப்புச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி பொன்நகர் பகுதியில் உள்ள கடை ஒன்றில் வைத்து பெண் ஒருவரைக் கைது செய்தனர். அவரிடம் இருந்து 30 கஞ்சா பைக்கற்றுகளையும் மீட்டுள்ளனர்.

ஒரு பைக்கற் கஞ்சா ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

(ஜ-6)

## தவக்கால தியானங்கள்

### நித்திய வாழ்வை நோக்கி

எமக்கு தேவன் கொடுத்த இந்த வாழ்வை இப்போதே ஆயத்தப்படுத்தி நமக்கு நித்தியமான வாழ்வு தரும் வழியை இப்போதே பயன்படுத்திக் கொள்வோம்.

காலம் கண் போன்றது, பொன் போன்றது, விலையேறப்பெற்றது என்று காலத்தை குறித்து நாம் சொல்லிக் கொண்டே போகலாம். இந்தக் காலத்தில் நாம் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைய காலத்தில் நாம் ஒவ்வொருவரும் எம்முடைய வேலைகளைச் செய்ய வேண்டுமானால் சோம்பேறிகளாக இந்த வேலையை நாளை செய்யலாம், பின்னர் செய்து கொள்ளலாம் என்று நாள்களை கடத்திக் கொண்டே செல்கிறோம்.

இதேபோல்தான் ஒரு பேராசிரியரிடம் மாணவன் ஒருவன் வந்து, நான் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதை எவ்வளவு காலம் தள்ளிப்போடலாம் என்று கேட்டுள்ளான். உடனே அந்தப் பேராசிரியர் அந்த மாணவனை பார்த்து உன்னுடைய சாவுநாளுக்கு முந்தைய நாள் வரை அதை தள்ளிப் போடலாம் என்று விநோதமான பதில் கூறி யுள்ளார்.

உடனே அந்த மாணவன் நான் எப்போது மரிப்பேன் என்று தெரியாதே? என்று கூறியுள்ளான். உடனே பேராசிரியர் நம்முடைய சாவு எப்போது? என்று யாருக்குமே தெரியாது அது உண்மை தான். எனவே இன்றே இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள தீர்மானம் செய் என்று கூறியுள்ளார்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்று மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டு இயேசுவோடுகூட சிலுவையில் அறையப்பட்ட கள்ளனைப்போன்று கடைசி நிமிடத்தில் நாம் மனந்திரும்பிக் கொள்ளலாம் என நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் எத்தனையோ மக்கள் எதிர்பாராத வேளையில் தங்கள் சாவைக் சந்திக்கின்றதை நாம் அனுதினமும் காண்கிறோம். இதைத்தான் வேதாகமத்தில் 2 கொரிந்தியர் 6ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தில் இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே எமக்குத் தேவன் கொடுத்த இந்த வாழ்வை இப்போதே ஆயத்தப்படுத்தி எமக்கு நித்தியமான வாழ்வு தரும் வழியை இப்போதே பயன்படுத்திக்கொள்வோம்.

## பேருந்துப் பயணிகளை சோதிக்கும் நடைமுறை

### வவுனியாவில் அதிரடிப்படையினர் தீவிரம்

வவுனியா,ஏப்.9

**வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி சென்ற பேருந்தில் பயணித்த பயணிகள் அனைவரையும் கீழே இறக்கி பயணப் பொதிகள், அடையாள அட்டைகளை சோதனை செய்த சிறப்பு அதிரடிப்படையினர் 15 நிமிடங்களின் பின்னர் செல்ல அனுமதித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து 7.15 மணியளவில் கண்டி சென்ற இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து இரவு 9.25 மணியளவில் புளியங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள சிறப்பு அதிரடிப்படையினரின் முகாமுக்கு முன்பாக அமைக்கப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கை நிலையத்தில் வழிமறிக்கப்பட்டு பயணிகளை அவர்களது பயணப்பொதிகளுடன் இறங்கிவருமாறு தெரிவிக்கப்பட்டு, பயணப்பொதிகள், அடையாள அட்டைகள், பரிசோதிக்கப்பட்டு 15 நிமிடங்களின் பின்னர் பேருந்தை செல்ல அனுமதித்தனர்.

பேருந்தில் சென்றவர்களை கீழே இறங்குமாறு தெரிவிக்கப்பட்டதையடுத்து, படையினர் எதற்காக இவ் வாறு சோதனை நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள் என்ற விடயங்களை அறிவதில் பயணிகள் தமக்கிடையே பேசிக்கொண்டனர்.

எனினும் வழிமறித்த அதிரடிப்படையினரிடம் எதற்காக இவ்வாறு வயது வேறு பாடுகளின்றி பயணிகளைக் கீழே இறக்கி சோதனை நடவடிக்கை மேற்கொள்கின்றீர்கள் என்று கேட்டபோது அது தமது வழமையான நடவடிக்கை எனத் தெரிவித்துள்ளனர். புளியங்குளம் அதிரடிப் படையினரின் சோதனை நடவடிக்கை முடிவடைந்து ஓமந்தை நொச்சிமோட்டை பாலத்தில் கடமையிலிருந்த பொலிஸார் தமது சோதனை நடவடிக்கைக்காக பேருந்தை வழிமறித்து உள் சென்றபோது அங்கு நின்றவர்கள் புளியங்குளம் முகாம் சிறப்பு அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர் எனத் தெரிவித்ததையடுத்து பொலிஸார் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளாமல் திரும்பிச் சென்றனர்.

சுமுகமானஒருசூழ்நிலையில்படையினர் பல்வேறு தரப்பினரை மறித்து கீழ் இறக்கி பயணப் பொதிகள், அடையாள அட்டைகள் சோதனை மேற்கொள்ளும் போது காரணம் தெரியாமல் பலவிதமான கேள்விகளுடன் பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. (க)



## வறட்சியால் வவுனியாவில் குடிதண்ணீர் வழங்கல்

வவுனியாவில் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குவவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் குடி தண்ணீர் வழங்கப்பட்டுவருகிறது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட குட்டிநகர், சிறிநகர் ஆகிய கிராமங்களில் 225 குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்களுக்கு நாள் தோறும் நான்காயிரம் லீற்றர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

இரு கிராமங்களிலும் 4 தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு அவற்றின் மூலம் தண்ணீர் வழங்கப்படுவதாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் தெரிவித்துள்ளார். அத்துடன், வவுனியா வடக்கு பிரதேசத்தில் காஞ்சுரமோட்டைப் பகுதி வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்தில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட இடர் உதவிகள் சேவைகள் நிலையம் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துடன் இணைந்து அவர்களுக்கான குடிதண்ணீரை வழங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-110)

## பசீலனின் தாயாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு

முல்லைத்தீவு,ஏப்.9

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த தளபதிகளில் ஒருவராக இருந்த பசீலனின் தாயாரான நல்லையா தங்கம்மாவின் இறுதி அஞ்சலி நிகழ்வு முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் உள்ள அவ்ரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பசீலனின் தாயாரின் உயிரிழப்பைத் தொடர்ந்து அவரின் இல்லத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரன் சென்று அஞ்சலி செலுத்தியதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களனா சாந்தி சிறீஸ்கந்தராசா,சிவசக்திஆனந்தன்,சி.சிவமோகன், வடமாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன்,வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை மற்றும் புதுக்குடி யிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த வீரத்தாயின் இறுதி நிகழ்வு அரசியல் வாதிகள் மக்களின் இறுதி வணக்கத்துடனும் பெருமளவான மக்களின் மலர் வணக்கத்துடனும்,அஞ்சலி உரைகள் இடம்பெற்று முள்ளியவளை கற்பூரப்புல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

(க-ரி3)

# யாழ்ப்பாணத்தில் ஒரு துண்டு காணிகூட படையினர் கையகப்படுத்த இடமளியோம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் ஒரு துண்டு காணியைக்கூட பாதுகாப்புத் தரப்பினர் கையகப்படுத்த இடமளிக்கமாட்டோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இந்த வருட முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான சோ.சேனாதிராசா மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வியஜகலா மகேஸ்வரன் ஆகியோர் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆரம்ப உரையாற்றும் போதே சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மற்றும் ஆளுநருக்கு என்று வரம்பு எல்லைகள் உள்ளன. அதை அவர்கள் தெரிந்து செயற்பட வேண்டும். தன்னிச்சையாகச் செயற்பட முடியாது.

எமக்கும் மக்களுக்கும் தெரியாமல் இங்கு காணி அபகரிப்புக்கள் நடைபெறுகின்றன. அரசுடன் கதைத்து முடிவு எட்டப்பட்டுள்ளது. அரச தலைவர் செயலணியின் தீர்மானம், முறையான அமைச்சரவைத் தீர்மானம், மக்களின் கருத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் பெறப்படாமல் காணி சுவீகரிப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள் மேல் இடங்களில் இருந்து வந்தால் பிரதேச செயலர்கள் அதை நடைமுறைப்படுத்த முன்னர் எமக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த விடயத்தில் பிரதேச செயலர்கள் தெளிவாக இருங்கள்.

அண்மையில் வலிகாமம் வடக்கில் காணிகள் அபகரிப்பு பதற்கு மக்களின் எதிர்ப்பு, எங்களின் பேச்சு மூலமாக நிறுத்தப்பட்டது. அதில் 734 ஏக்கர் சிமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமானது. ஆகவே அதனை மீள இயங்க வைப்பதற்கும் தொழில் பேட்டைகளை அமைப்பதற்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதையும் கடற்படை கேட் கின்றனர். அவர்களுக்கு எத்தனை ஏக்கர் வேண்டும் என்ன தேவைக்கு வேண்டும் என்பது தொடர்பில் முதலில் ஆராய வேண்டும் - என்றார்.

### கூட்டம் பற்றி அறிவிப்பு

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் 3 மணித்தியாலங்களுக்குள் நிறைவுறுத்தப்பட வேண்டும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்க்க முடியாத விடயங்களே இங்கே முதன்மையாக ஆராயப்பட வேண்டும் என்று தற்போது அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

### அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஊடாகக் கிடைக்கப்பெற்ற நிதி மூலங்களின் அடிப்படையில் 13 அரச அலுவலகங்கள் ஊடாக 5 ஆயிரத்து 973அபிவிருத்தித் திட்டங்கள் 8 ஆயிரத்து 293 மில்லியன் ரூபா செலவில் செய்து முடிப்பதற்குக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

### கிராம எழுச்சி

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் வைக்கப்படும் பெயர்ப் பலகை தேவையில்லை. அதற்குச் செலவிடும் பணத்தை முழுமையாக அந்தத் திட்டத்துக்கே செலவிடலாம் என்று தெரிவித்த வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம், ஒரு திட்டத்துக்கு 30 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டால் பெயர்ப் பலகைச் செலவு போக மிகுதி சுமார் 23 ஆயிரம் ரூபாவே கிடைக்கிறது - என்றார்.

இதை மாகாணத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டும் என ஈ.பி.டி.பி பிரதிநிதி கோரினார். மாகாணத்தின் 15 அதிகாரங்களைப் பறிப்பதற்கு ஆதரவாகக் கொண்டு வரப்பட்ட திவிநெகும சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் இன்று தமது பிடி இல்லாதபடியால் இதே கோரிக்கையை வைப்பது வேடிக்கையானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரன் தெரிவித்தார்.

பெயர்ப் பலகை போடுவது நிதி வீண் விரயம் என்றால் இது பற்றித் தீர்மானம் எடுத்து அரசுக்கு அனுப்புவோம் - என்றார் சேனாதிராசா.

### காணி சுவீகரிப்பு

"எதிர்வரும் 11ஆம் திகதி மண்டை தீவுப் பகுதியில் 11 பேரின் காணிகள் கடற் படைக்கு வழங்குவதற்கு அளவீட்டு பணிகள் நடைபெறவுள்ளன" என்று நாடளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார். "எமக்குத் தெரியாமால் எந்தக் காணியும் சுவீகரிப்பதற்கு அனுமதியில்லை. இது தொடர்பாக உரிய தரப்பினருடன் பேசுகிறேன்" என்று மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

"நான்கு பேருக்கு சொந்தமான 12 பரப்புக் காணியை மானிப்பாய் பொலிஸ் நிலைய விடுதி மற்றும் அணி வகுப்பு மரியாதை செய்யும் இடமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

"காணி உரிமையாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் அருகில் உள்ள இடத்தில் வாடகைக்கு இருக்கின்றனர். பொலிஸ் நிலையத்துக்குத் தேவையான காணி ஒன்று நவாலியில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3 பரப்புக் காணி உரிமையாளர் ஒருவரின் சம்மதத்துடன் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் 12 பரப்புக் காணியும் வேண்டும் என்று கோரி அதற்கான அளவீட்டு பணிகள் நடைபெறவுள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூட்டத்தில் கலந்து கொண்டமையால் அவருடன் கலந்துரையாடி மாற்றுக் காணி ஒன்றை அடையாளம் காணக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸார் தவிர்ந்த இராணுவத்தினர் மற்றும் கடற் படையினர் 43 இடங்களில் காணிகளை சுவீகரிப்பதற்கு அளவீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளதாக மூத்த நில அளவை அதிகாரி தெரிவித்தார். இந்தக் காணிகள் அடையாளம் காணப்பட்டு இரண்டு பாதுகாப்புப் பிரிவினரும் கையகப்படுவதற்கு அளவீட்டுப் பணிகளுக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது - என்றார்.

அவை உரிமையாளர்களின் சம்மதத்துடன் வழங்கப்பட்டுள்ளதா அல்லது பலவந்தமாக அளவீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளதா என்று பிரதேச செயலர்கள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அப்போதுதான் நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார் சேனாதிராசா.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு வழங்க வேண்டிய காணியைப் பெற்றுத் தாருங்கள் என்று போதனா மருத்துவ மனைப் பணிப்பாளர் தெரிவித்தார். மருத்துவ மனைக்கு வழங்குவதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட 3 பரப்புக் காணி மருத்துவ மனைக்கு முன்பாகவுள்ளது. அங்கு சில பொலிஸார் காவலுக்கு உள்ளனர் - என்றார்.

காணி தனியார், அரசுக்குச் சொந்தமானதா என்ற உரிமம் தொடர்பில் ஆராயப்பட்டு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

### வீடமைப்பு

வலி. வடக்கு மாவை கலட்டியில் பல வீடுகள் கட்டப்பட்டபோதும் எவரும் வசிப்பதில்லை. வீடுகள் இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்று ஈபிடிபி பிரதி நிதி கேள்வி எழுப்பினார். அங்கு வீடுகள் இல்லாதவர்களுக்கே அவை வழங்கப்பட்டுள்ளன. வேலை நிமித்தம் வேறு இடத்தில் உள்ளனர். வேலை நிறைவடைந்து இங்குள்ள வீடுகளில் தான் வசிக்கின்றனர். வீடுகள் ஒன்றும் வெறுமையாக இல்லை என்று வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேசத்தை மீள் குடியேற்ற பிரதேசமாக ஒருவரும் கருதவும் இல்லை கண்டு கொள்ளவும் இல்லை இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். எமது பிரதேசத்தில் சுமார் ஆயிரம் வீடுகள் தேவையாக உள்ளன. ஆனால் மக்களுக்கு வீடுகளும் இல்லை காணிகளும் இல்லை - என்றார். அரச காணிகள் இங்கு இல்லை என்று பிரதேச செயலர் பதிலளித்தார்.

### காணி உரிமம் பிழை

யாழ்ப்பாண மாவட்டத்தில் கள்ள உறுதி முடித்து காணிகளை பதிவு செய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று மேலதிக மாவட்டச் செயலர் தெரிவித்தார். வீடுகளை நாம் வழங்கும் போது இவ்வாறான சிக்கல்களை எதிர் கொள்கின்றோம். குறைந்த விலையில் காணி கிடைக்கிறது என்று மக்கள் அதனை வாங்குகிறார்கள். அதன் உரிமம் வேறு நபரில் பதிவு இருக்கும். இது வரை 80 பேர் இவ்வாறு அறியாமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

### உயர்கல்வி நிறுவனங்கள்

கல்வி சார்ந்த பிரச்சினைகளை ஆராய்வதற்கு பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து பிரதிநிதி ஒருவர்கூட கூட்டத்துக்கு வரவில்லை என்று நேற்றைய கூட்டத் தில் சுட்டிக்காட்டப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள பல்கலைக் கழகத்தில் இந்து சமயத்துக்கான பீடம் ஒன்று வேண்டும் என்று கல்விச் சமூகத்தால் சுட்டிக் காட்டப்பட்டது.

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் அனைத்துக் கற்கை நெறிகளும் கற்பிக்கக்கூடிய வகையில் மனித வளம், பௌதீக வளங்கள் வேண்டும் என்று அதன் அதிபர் வேண்டுகோள் விடுத்தார். தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவாளர் நியமிக்கப்படாமையால் 4 மில்லியன் அபிவிருத்தி வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

### கல்வித் தரம் உயர்வு

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் கல்வி மட்டம் உயர்ந்துள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி மட்டம் 2011ஆம் ஆண்டு 55 வீதமாகக் காணப்பட்டது. தற்போது 70 வீதமாக அதிகரித்துள்ளது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2017ஆம் நாடு 63 வீத சித்தி வீதம் காணப்பட்டது. தற்போது 75 வீதமாகக் காணப்படுகிறது. க.பொ.த உயர் தரத்தில் கணிதம், உயிரியல், வணிகம் ஆகிய துறைகளில் சிறந்த பேறுகளைப் பெறுகிறோம் - என்றார்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் எந்தக் குறைபாடும் இல்லையா என்று கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார். வலயக் கல்விப் பணிப்பாளர் வலயம் சார்பான விடயங்களை ஒரு சில வசனங்களில் வரிகளில் சொல்லி முடித்த நிலையில் அவர் இவ்வாறு வினாக்களை தொடுத்தார். அதற்கும் பணிப்பாளர் பதிலளித்தார்.

### தண்ணீர்ப் பிரச்சினை

யாழ்ப்பாணத்தில் அதிக நன்னீரை உறிஞ்சி உவர் நீராக்காமல் நீர் வளச் சபையின் அறிவுரையின் கீழ் செயற்பட வேண்டும் என்று உள்ளூராட்சி மன்றத்தினர் தெரிவித்தனர். காரைநகர் தண்ணீர்ப் பிரச்சினையும் பேசப்பட்டது. கடற்படையினரின் மிகையான தண்ணீர் உறுஞ்சலைத் தடுப்பதற்குப் பிரதேச சபையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

### சட்டத்தரணிகளுக்கு நன்றி

சுன்னாகம் உள்ளிட்ட மக்களின் நீர் நிலைகளுக்குள் மின் வழங்கும் நிறுவனத்தின் கழிவு எண்ணை கலந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மக்களுக்கு நீதியை நிலை நாட்டிய சட்டத்தரணிகள் மற்றும் ஏனையோருக்கு நன்றி தெரிவித்து அது தொடர்பான தீர்மானம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனால் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(த-7105)

# இறந்து 25 வருடங்களுக்குப் பின் யாழ். வந்த உடல்

யாழ்ப்பாணம், ஏப்.9

இத்தாலி நாட்டில் இறந்த யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்தவரின் உடல் சுமார் 25 வருடங்களுக்குப் பிறகு அவரது சொந்த ஊரான யாழ்ப்பாணம் சாவகச்சேரிக்கு நேற்றுக் அதிகாலை எடுத்துவரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த எம்.ஸ்ரீபன் யோகி என்பவர் இத்தாலி நாட்டில் தொழில் புரிந்து வந்துள்ளார். நோய்வாய்ப்பட்ட ஸ்ரீபன் 1994ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி அவருடைய 49 வது வயதில் இத்தாலியில் உயிரிழந்தார்.

இலங்கையில் போர் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காரணத்தால் இறந்தவரின் உடலை இலங்கைக்கு கொண்டுவரமுடியாத காரணத்தாலும் போர் எப்போது முடிவடையும் என்று தெரியாத காரணத்




தாலும் இத்தாலியில் இருந்த உறவினர்கள் 25 ஆண்டுகளுக்கு உடலைப் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுத்தனர்.

இந்நிலையில் நாட்டில் போர் நிறைவுக்கு வந்தாலும் 25 வருடங்கள் நிறைவடையாமல் உடலைப் பொறுப்பேற்பதில் சிக்கல்கள் ஏற்பட்டது. இதனால் இறந்தவரின் மனைவி இத்தாலி நாட்டுக்குச் சென்று கணவரின் உடலைப் பார்வையிட்டு வந்துள்ளார்.

தற்போது 25 வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் இறந்தவரின் உடல் இன்று அதிகாலை யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

# அருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்

*முத்து சிவலிங்கம் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 9

அருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் போன்று சிலருக்கு தொண்டமானை காணும்போதெல்லாம் அச்சம் ஏற்படுகின்றது. அதனால்தான் சிலர் எம்மை தொடர்ந்து விமர்சித்துக்கொண்டிருக்கின்றனர் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்தவெள்ளிக்கிழமை இந்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் நிதி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஆரம்பித்த வேலைத்திட்டங்களையே தற்போதுள்ளவர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

தோட்டத்துக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொடுத்தது எமது கட்சி. அதனால்தான் அவரை விமர்சிக்கின்றனர். நாங்கள் யாரையும் விமர்சிக்கமாட்டோம். எமது மக்கள் எந்த நோக்கத்துக்கு எம்மை நாடாளுமன்றுக்கு அனுப்பினார்களோ அதனை நிறைவேற்றிக்கொடுப்பதே எமது நோக்கம் - என்றார். (த-31)



# அடுத்த கட்டத்தை கவனத்தில்கொண்டே வாக்களித்தோம்

*சிறிநேசன் எம்.பி. விவரிப்பு*

வரவு - செலவுத் திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிப்பதா எதிர்ப்பதா என்பதை விட அடுத்த கட்டம் என்ன நடக்கப்போகிறது என்பதைக் கவனத்தில் கொண்டே நாங்கள் செயற்பட்டோம் என்று அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார். வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடித்து எதிரணியினருக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஈடுபடாது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிப்பதா எதிர்ப்பதா என்பதை விட அடுத்த கட்டம் என்ன நடக்கப்போகிறது என்பதை கவனத்தில் கொண்டே நாங்கள் செயற்பட்டோம். ஊடகவியலாளர்களைக் கடத்தி கொலை செய்த யுகத்துக்குத் திரும்புவதற்கு நாங்கள் தயாராக இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தேவாலயத்துக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். ரவிராஜ் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். சிவநேசன் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவ்வாறு இழப்புக்களை நாங்கள் கடந்த ஆட்சியில் சந்திக்க நேரிட்டது. இனி அவை இடம்பெற, அவற்றைச் செய்தவர்களுக்கு நாங்கள் வாய்ப்பளிக்கக்கூடாது - என்றார்.

# இலங்கைப் படைக்கென்று மிகப்பெரிய போர்க்கப்பல்

*மே மாதத்தில் கொழும்புக்கு வந்துவிடும்*

இலங்கைக் கடற்படையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ள மிகப்பெரிய போர்க்கப்பல், அடுத்த மாதம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் என்று அரசதலைவர் கடற்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமெரிக்க கடலோரக் காவல் படையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட போர்க்கப்பலே, மீளத் திருத்தியமைக்கப்பட்டு இலங்கைக் கடற்படைக்கு கொடையாக வழங்கப்பட்டுள்ளது. தற்போது, பி626 என்று இலக்கமிடப்பட்டுள்ள இந்தப் போர்க்கப்பல் அமெரிக்காவின் ஹவாயில் உள்ள ஹொனொலுலு துறைமுகத்தில் இருந்து கடந்த வாரம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

மே மாதம் இரண்டாவது வாரத்தில் இந்தப் போர்க்கப்பல் கொழும்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக, இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் இசுரு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இந்தப் போர்க்கப்பலில் உலங்குவானூர்தி இறங்குதளமும், கடற்படை உலங்குவானூர்தி தரிப்பிட வசதியும் உள்ளது. இலங்கைக் கடற்படையில் இந்தக் கப்பல் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர், இதுவே மிகப் பெரிய போர்க்கப்பலாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

# போதை ஒழிப்பு மாநாடு வர்த்தகர்களும் ஆதரவு



அம்பாறை, ஏப். 9

கிழக்கிலங்கையின் கல்முனை மாநகரில் 5 ஆம் திகதி புகைத்தல் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வூட்டும் மாநாடு ஒன்று நடைபெற்றது.

''புகைத்தல், போதைப் பொருள் பாவனையற்ற கல்முனை"எனும் தொனிப் பொருளில் கல்முனை புகைத்தல் போதைப் பொருள் ஒழிப்பு செயலணியினால்இந்தவிழிப்புணர்வு மாநாடு நடத்தப்பட்டது.

செயலணியின் தலைவரும் கல்முனை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவருமான மருத்துவர் எஸ்.எம்.ஏ.அஸிஸ் தலைமையில் கல்முனை முகைதீன் ஜூம் பள்ளிவாசல் மண்டபத்தில் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டுக்கு ஆதரவு தெரிவித்து கல்முனை மாநகரம் முழுவதும் பல்வேறு அமைப்புகள் பள்ளிவாசல்கள் சார்பில் பெருமளவில் பதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்ததுடன், கல்முனை மாநகரிலுள்ள வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள் மூடப்பட்டும் ஆதரவு வழங்கப்பட்டது.

பெருமளவிலான பொதுமக்கள் உலமாக்கள்,புத்திஜீவிகள், பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்லா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஹயஹகருணாரட்ண, கல்முனை மாநகர மேயர் ஏ.எம்.றகீப், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன் உட்பட பல பிரமுகர்கள் மாநாட்டில் கலந்துகொண்டதுடன், பாதுகாப்புபடை உயரதிகாரிகள் உலமாக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் புகைத்தல் போதைப் பொருள் பாவனையைத் தவிர்த்தல், விற்பனை செய்தல், வழங்கல், கொண்டு செல்லுதல், பாதுகாத்தல்,சேமித்து வைத்தல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் தொடர்பில் மாநாட்டில் சத்தியப்பிரமாண நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது. (க-30)

# புதுவருடத்தைக் கொண்டாட சிறிசேன வெளிநாடு பயணம்

கொழும்பு, ஏப். 9

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சிங்கள தமிழ் புத்தாண்டு விடுமுறையை தமது குடும்பத்தினருடன் கொண்டாடுவதற்காக வெளிநாடு ஒன்றுக்குப் பயணமாகவுள்ளார் ஏன்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனிப்பட்ட பயணமாகவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

யாத்திரைப் பயணமாகவும் மேற்கொள்ளப் படவுள்ள இந்தப் பயணம் குறித்து தகவல் வெளியிட்ட அந்த வட்டாரங்கள், எந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்ற தகவலை வெளியிட மறுத்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் ஆங்கிலப் புத்தாண்டு விடுமுறைக்காலத்திலும் அவர் தனது குடும்பத்தினருடன் தாய்லாந்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். (த)

# தினமும் குளிக்கும் குளத்தில் ஒருவர் முதலையால் சாவு

கொக்கட்டிச்சோலை, ஏப். 9

தினமும் ஏராளமானோர் குளித்து வந்த குளத்தில் இருந்த முதலை, அங்கு குளிக்க வந்த குடும்பப் பெண்ணை இழுத்துச் சென்றுள்ளது. அவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை காவல் பிரிவுக்கு உட்பட்ட கடுக்காமுனை - வால்கட்டுக் குளத்தில்கடந்த வெள்ளிக்கிழமை இது இடம்பெற்றுள்ளது.

கடுக்காமுனைக் கிராமத்தைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தாயான இளைய தம்பி நல்லம்மா என்பவரே உயிரிழந்தார்.

இந்தக் குளத்தில் முதலைப் பிடித்து உயிரிழந்தமை இதுவே முதல்தடவை என அப்பகுதி என்று மக்கள் கூறுகின்றனர். (த)

# தமிழர்களின் நிர்வாகத் திறனை நாங்கள் கட்டியெழுப்பவேண்டும்

*கோடீஸ்வரன் எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, ஏப். 9

30 வருடங்களுக்கு முன் அரசதிணைக்களங்களிலும், நிர்வாகங்களிலும் பெரிய பதவிகளை வகித்து நாட்டை நிர்வாக ரீதியாக ஆட்சி செய்தவர்கள் தமிழர்கள். அந்த நிர்வாக திறமை ஒவ்வொரு தமிழர்களிடமும் இருக்கின்றது. அதை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய, மாகாண மட்டத்தில் கல்வி ,கல்விசாரா இணைப் பாடவிதான செயற்பாடுகளில் சாதனை நிகழ்த்திய மாணவர்களுக்கான மதிப்பளிப்பு விவேகானந்த மகா வித்தியாலய கலையரங்கில் அண்மை யில் சிறிமுருகன் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அதிபர் க.பேரானந்தம் தலைமையில் நடைபெற்றது.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரினவாதக் கட்சிகளால் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்கக் குரல்கொடுக்க முடியாது.

தமிழர்களின் உரிமைக்காகவும் இருப்புக்காகவும் போராடிவருகின்ற ஒரே ஒரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே தவிர ஏனைய பேரினவாத கட்சிகளல்ல. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை பேரினவாதக் கட்சிகள் புறந்தள்ளி ஒதுக்கியுள்ளன. எமது மக்களின் உரிமை, தேவைகள் நிராகரிக்கப்பட்டு மறுக்கப்பட்டுள்ளன. உரிமைகளை மீட்டெடுக்கப் போராடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒவ்வொருவரும் பலப்படுத்த வேண்டும்.

எமது உரிமைகளை வென்றெடுக்க கல்வியை மிகப்பெரிய ஆயுதமாக பயன்படுத்த வேண்டும். - என்றார். (த)

# மக்களுக்கு அபிவிருத்தி தேவை அதனால்தான் ஆதரவளித்தோம்

*கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் தெரிவிப்பு*

வவுனியா, ஏப். 9

மக்களுக்கு அபிவிருத்தி தேவை என்பதனாலேயே வரவு -செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தேரம் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா சிதம்பரபுரம் சந்திரோதய விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டை முன்னிட்டு சித்திரைப்புத்தாண்டு விளையாட்டுப் போட்டி நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு -செலவுத்திட்டத்துக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஏன் வாக்களித்தது என்ற கருத்து திரிபுபடுத்தப்பட்டு மக்கள் மத்தியில் பரப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஒரு விடயத்தை நாம் தெளிவாகக் கூற வேண்டும். எங்கள் மக்களுக்கு எந்தவேளையிலும் துரோகம் செய்ய நினைப்பவர்கள் நாங்கள் அல்ல. ஆனால் சதிப்புரட்சியின் மூலம் ஆட்சியை பிடிக்க எத்தனித்தவர்கள் மீண்டும் இந்த வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வரக் கூடாது - என்றார். (த-110)

# ரணிலைக் காக்கும் கூட்டமைப்பை விரட்ட வேண்டுமாம் தமிழ் மக்கள்

கொழும்பு, ஏப்.9

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே பாது காத்து வருகின்றனர். அவர்களை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் விரட்டியடிக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி சுகபோக அரசியலை மேற்கொண்டுவருகின்றனர். அவர்கள் ரணில் அரசின் பல கோடி ரூபாக்களுக்கு விலை போய் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துள்ளார்கள். அதனால் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள், அவர்களின் சொந்தங்கள் வெளிநாடுகளில் கல்வி கற்கின்றனர். ஆனால், கூட்டமைப்பினரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய தமிழ் மக்களின் பிள்ளைகள் வடக்கு, கிழக்கில் கொட்டில்களில் கல்வி கற்கின்றனர். இதுதான் இன்றைய நிலைமை.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புலிவேசம் போட்டு ஆடித் திரியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரின் உண்மை முகத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் கிழித்துக் காட்ட வேண்டும். அவர்களுக்குத் தக்க பாடத்தை தமிழ் மக்கள் புகட்ட வேண்டும் - என்றார். (எ-22)

# தமிழருக்குத் தீர்வை வழங்கியே தீருவோம்

## ஐ.தே.க. உறுதி

யாழ்ப்பாணம், ஏப்.9



கொடூர போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். அவர்களுக்கு அரசியல் தீர்வை வழங்கும் பொறுப்பு எம்மிடம் உண்டு. இதை நாம் செய்தே ஆக வேண்டும். இல்லையெனில் தமிழ் மக்கள் எம்மை வெறுத்து விடுவார்கள்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளனர். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஏகோபித்த ஆதரவை வழங்குவதை நாம் மறக்க முடியாது. தமிழ் மக்களின் நலன் கருதியே அவர்கள் எமக்கு ஆதரவு வழங்குகின்றமை உண்மை.

'2018 ஒக்டோபர் 26' அரசியல் சூழ்ச்சி தொடக்கம் '2019 வரவு - செலவுத் திட்டம்' வரை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு பேராதரவை வழங்கினார்கள். 'அரசியல் சதி முயற்சி'யின்போது கூட்டமைப்பினரும் எம்முடன் கைகோர்த்து இருந்தபடியால்தான் அதை முறியடிக்கக் கூடியதாக இருந்தது.

கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வை நாம் வழங்கியே தீருவோம்-என்றார். (எ-22)

# லண்டனில் இலங்கைத் தமிழர் சந்தேகமான முறையில் சாவு

கொழும்பு, ஏப்.9

பிரிட்டன் லண்டன், ஹாரோ தென் பகுதியில் இலங்கை தமிழர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். காலில் காயங்களோடு இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்த அவருக்கு வழங்கப்பட்ட அவசர சிகிச்சைகள் எதுவும் பயனளிக்காது அவர் இறந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.20 மணியளவில் வட மேற்கு லண்டனில் ஹாரோ பகுதியில் வலம்புரி காஷ் அண்ட் கரி என்ற கடையில் ஒருவர் கத்திக்குத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு விரைந்த பொலிஸார் அந்த பகுதியில் கத்தியுடன் ஓடித்திரிந்த ஒருவரை கைது செய்துள்ளனர்.

கத்திக் குத்துக்கு உள்ளானவர் மீட்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்தவர் தமது கடைக்கு ஓடி வந்து கழிப்பறையைப் பயன்படுத்த அனுமதி கேட்டார் என்றும், அரை மணி நேரம் கழித்தும் வெளியே வராத காரணத்தால் தாம் அங்கு சென்று பார்த்த போது அவர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டார் என்றும் குறித்த சம்பவம் தொடர்பில் கடையின் பணியாளர் தெரிவித்துள்ளார்.

அனைத்து இடங்களிலும் இரத்தம் காணப்பட்டது என்றும் உடனே பொலிஸாருக்கும், நோயாளர் காவு வண்டிக்கும் தான் தகவல் கொடுத்தேன் என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கிருந்த பாதுகாப்புக் கமராக்களை பொலிஸார் சோதித்தனர் என்றும், அதில் உயிரிழந்தவர் காலில் இரத்தக் காயத்துடன் சாதாரணமாகவே நடந்து சென்றது பதிவாகியுள்ளது என்றும் கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் தமது கடைக்கு அருகிலுள்ள பலசரக்குக் கடையில் வேலை பார்த்து வந்தவரெனவும் எப்பொழுதும் தமது கடைக்கு வந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பார் எனவும் தெரிவித்துள்ள கடை உரிமையாளர் அவர் நல்ல மனிதன் என்றும் வன்முறைகளில் ஒருபோதும் ஈடுபடாதவர் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இறந்தவர் ஒரு இலங்கை தமிழர் என்றும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை இவரது உயிரிழப்புத் தொடர்பாக உடற்கூற்றுச் சோதனைகளின் பின்னரே தீர்மானிக்க முடியும் என ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## மாணிக்கக் கல் அகழ்ந்தனரென ஆறு பேர் கைது

கொழும்பு, ஏப்.9

பொகவந்தலாவ, இரணிக்காடு தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)

## மக்கள் விடுதலை முன்னணியின் மக்கள் சந்திப்பு

வவுனியா, ஏப்.9

மக்கள் விடுதலை முன்னணியின் மக்கள் சந்திப்பு கடந்த சனிக்கிழமை வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளரும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை உறுப்பினருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் முன்னணியால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விளக்கமளிக்கப் பட்டிருந்தது. (க-110)



## மைத்திரி தலைமையில் தேசியப் புத்தரிசி நிகழ்வு

கொழும்பு, ஏப்.9

விவசாய கலாசாரத்தின் 52ஆவது தேசிய புத்தரிசி விழா நேற்றுமுன்தினம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அநுராதபுர ஜயசிறி மகாபோதி முன்னிலையில் நடைபெற்றுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லை ஜயசிறி மகாபோதிக்கு காணிக்கையாக செலுத்தும் கோலாகல நிகழ்வு அடமஸ்தானாதிபதி வண.பல்லேகம சிறினிவாச நாயக்க தேரரின் ஆலோசனைக்களுக்கமைய விவசாய அமைச்சும் கமநல சேவைகள் திணைக்களமும் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இது தொடர்பாக அரச தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜயசிறி மகாபோதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட காலம் முதல் ஆரம்பிக்கப்பட்டதாக கருதப்படும் இந்த புத்தரிசி விழா ஊர்வலமானது. சிங்கள முறைப்படி மங்கள வாத்தியங்களுடனும் சிங்கள கலாசார அம்சங்களுடனும் கிழக்கு வாசலின் ஊடாக ஜயசிறி மகா போதியை வலம்வந்து அங்கு பிரத்தியேகமாக வைக்கப்பட்டுள்ள தங்க முலாம் பூசிய பாத்திரத்தில் புத்தரிசி நிரப்பும் பணியும் ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது படியரிசியை வண.பல்லேகம சிறினிவாச நாயக்க தேரர், விவசாய அமைச்சர் பீ.ஹரிசன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலைமை பதவி வகிக்கும் விவசாயிகளும் பாத்திரத்தில் சமர்ப்பித்தனர்.

பிரித்பாராயண முழக்கங்களுக்கு மத்தியில் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த விவசாய குடிமக்கள் பாத்திரம் நிறையும் வரை புத்தரிசியை கொட்டினர்.

நிகழ்வில் கலந்துகொண்ட அரச தலைவர் மைத்ரி பால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அதிதிகளும் பாத்திரத்தில் அரிசி நிரப்புவதில் கலந்துகொண்டனர்-என்றுள்ளது. (எ)

## துப்புரவுப் பணி முன்னெடுப்பு

கொக்கட்டிச்சோலை, ஏப். 9



மட்டக்களப்பு மண்முனை மகிழடித்தீவுப் பகுதியில் உள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம், மண்முனைப் தென்மேற்கு பிரதேசசபை மற்றும் மாணவர்கள் இணைந்து கடந்த வியாழக்கிழமை இந்தப் பணியை முன்னெடுத்தனர். அரச தலைவரின் செயற்றிட்டங்களில் ஒன்றான பொலித்தீன், பிளாஸ்ரிக் அற்றசூழலை உருவாக்கும் செயற்பாட்டின் கீழ் இந்தப் பணி இடம்பெற்றது.

இந்தப்பணியில், மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலர் தெட்சணகௌரி தினேஸ், மண் முனை தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் சி.புஸ்பலிங்கம் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# மொழியைக் கொண்டு மக்கள் வேறுபட்டு இருப்பது கூடாது

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.9

பேசும் மொழியை அடிப்படையாகக் கொண்டு நாட்டு மக்கள் பிளவுபட்டிருப்பதற்கு கட்சி பேதமின்றி அனைத்து அரசியல்வாதிகளும் பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சிங்களத்துக்கு மொழி பெயர்க்கப்பட்ட புனித அல்குர்ஆன் நூலை வெளியிடுவதற்காக விழா வில் உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார் என அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் உள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இஸ்லாத்தின் வரலாறு தொடர்பில் புரிந்து கொள்வதற்கும் முஸ்லிம் மக்களின் கலாசாரம் மற்றும் மத பின்புலம் தொடர்பில் ஏனைய மதத்தினரும் புரிந்துகொள்ளக் கூடியவாறு மொழிபெயர்ப்புக்கு அப்பாற்பட்டு சரளமான சிங்கள மொழியில் அல்குர்ஆனை மொழி பெயர்த்திருப்பது சிறப்பம்சமாகும்.

மொழியால் நாட்டு மக்கள் பிளவுபட்டிருப்பது நாட்டின் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை நிலை நாட்டுவதற்கு தடையாக அமைந்துள்ளது - என்று சிறிசேன தெரிவித்தார்.

சிங்களத்துக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட புனித அல்குர்ஆனின் முதலாவது பிரதியை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்செய்க் றிஸ்வி முப்தி அரச தலைவரிடம் கையளித்தார் - என்றுள்ளது. (எ)

# ஏ.எல். பெறுபேற்றுடன் என்.வி.கியூ சான்றிதழ்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 9
தொழில் உலகத்துக்கு ஏற்ற வகையில் தொழிற் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் 13 வருட தொடர் கல்வியை முழுமைப்படுத்தும் மாணவர்களுக்கு, க.பொ.த உயர்தர சான்றிதழையும் பன்னாட்டு அளவில் ஏற்றுக் கொள்ளப்படும் என்.வி.கியூ சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான பாடசாலை விளையாட்டு வர்ண விருது வழங்கல் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பாடசாலைக் கல்வியின் பின்னர் தொழில் உலகத்துக்குப் பிரவேசிக்கும் மாணவர்களுக்குக் குறித்த இரு சான்றிதழ்களின் ஊடாக எந்தவொரு குறைபாடுகளுமின்றி தொழில் உலகத்துக்குள் பிரவேசிக்க முடியும்.
தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் பயிற்சியாளர் 3ஆயிரத்து 850 பேருக்கும் மே மாதமளவில் நியமனம் வழங்கி முழுமையான பயிற்சி அளிக்கப்பட்டதன் பின்னர் பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.
விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்தும் மாணவர்கள் ஆயிரம் பேருக்கு சுபக புலமைப் பரிசில் நிதியத்தின் ஊடாக மாதாந்தம் 2ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்க அமைச்சரவையில் பத்திரமொன்றை முன்வைத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
13 வருட தொடர் கல்வியின் ஊடாக சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றாலும் பெறாவிட்டாலும் எந்தவொரு இடையூறும் இன்றி உயர்தரம் கற்பதற்கு வாய்ப்பு ஏற்படும். விளையாட்டின் ஊடாக முன்செல்ல முடியுமாயின் பல்கலைக் கழகம் மற்றும் உயர்தர நிறுவனங்களுக்குச் சென்று வெற்றிகரமாக கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் - என்றார். (த-31)

---

## அவசர...

யுள்ளார்.
கோத்தபாய ராஜபக்ச தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள நிலையில் அவருக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இந்த வழக்குகள் தொடர்பாக அவருக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு எழுத்து மூல அறிவிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
இந்தப் பின்னணியில் எதிர்வரும் வெள்ளியன்று கோத்தபாய நாடு திரும்புகிறார் என அறியமுடிகின்றது.
அதேவேளை, அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவார் எனக் கருதப்படும் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க குடியுரிமையைத் துறக்கும் ஆவணங்களை கடந்த 6 ஆம் திகதி அமெரிக்கத் தூதரகத்தில் கையளித்திருந்தார். (எ-22)

## ஹெரோய்ன்...

ஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி3)

## இரணைமடுக்...

டம ஆளுநர் செயலகத்தில் வைத்து அறிக்கையைக் கையளித்தார்.
இந்த விசாரணைக் குழுவில் பொறியியலாளர் ரகுநாதன், பொறியியலாளர் இந்திரசேனன், பொறியியலாளர் ஹேரத் மந்திரித்திலக ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.
அறிக்கையைக் கையளிக்கும்போது ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், உதவிச் செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோரும் உடனிருந்தனர். (எ-7)

## கோத்தபாயவுக்கு...

ரமதுங்க தாக்கல் செய்துள்ளார்.
இரண்டாவது வழக்கை இலங்கையில் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட தமிழர் ஒருவரின் சார்பில் அனைத்துலக உண்மைக்கும் நீதிக்குமான திட்டம் என்ற மனித உரிமை அமைப்பு தாக்கல் செய்துள்ளது.
தமது தந்தையின் படுகொலைக்குக் காரணமானவர் என்ற அடிப்படையில் கலிபோர்னியாவில் உள்ள நீதிமன்றத்தில் அசிம்சா விக்கிரமதுங்க தாக்கல் செய்துள்ள சிவில் பாதிப்பு வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று கோத்தபாய ராஜபக்சவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
கலிபோர்னியாவில் உள்ள அமெரிக்கப் பல்பொருள் அங்காடி வளாளத்தில் உள்ள வணிக நிலையம் ஒன்றின் வாகனத் தரிப்பிடத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கோத்தபாயவிடம் இந்த வழக்குத் தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.
அதேவேளை, படையினரின் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட ஒருவரின் சார்பில், யஸ்மின் சூகா தலைமையிலான அனைத்துலக உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பு அமெரிக்க சட்ட நிறுவனம் ஒன்றுடன் இணைந்து மற்றொரு வழக்கை கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளது.
இந்த சிவில் பாதிப்பு வழக்குத் தொடர்பாகவும் கோத்தபாயவுக்கு நேற்றுமுன்தினம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.
சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட அந்தத் தமிழர், கோத்தபாய ராஜபக்சவிடம், இழப்பீடு கோரி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.
கனடாவில் வசிக்கும் இவர், 2007ஆம் ஆண்டு கொழும்பில் கைதுசெய்யப்பட்டு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டிருந்தார். 2010ஆம் ஆண்டு இவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.
திருமணம் ஒன்றில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ச அடுத்த சிலநாள்களில் நாடுதிரும்பவிருந்தார்.
இந்நிலையிலேயே, அவருக்கு எதிராக, இரு வேறு சட்ட நிறுவனங்களால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளால் கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்க குடியுரிமை துறப்பு செயற்பாடுகளில் பெரும் நெருக்கடி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
அதேவேளை, அரச தலைவர் வேட்பாளராக களமிறங்கவுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களே இதன் பின்னணியில் செயற்பட்டுள்ளனர் என மகிந்த அணி குற்றஞ்சாட்டியுள்ளது. (எ-22)

## நீதிமன்றில்...

ணம் பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பல வழக்குகள் உள்ளன. சந்தேகநபர் வழக்குத் தவணைகளுக்கு ஒழுங்காக முன்னிலை யாகாததால் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து உத்தரவை நிறைவேற்றிய கோப்பாய் பொலிஸார் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.
சந்தேநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்காகப் பொலிஸார் நேற்று நீதிமன்றுக்கு அழைத்து வந்துள்ளனர். நீதிமன்றின் உட்பகுதியில் சந்தேகநபரை நிற்கவைத்துவிட்டுப் பொலிஸ் அலுவலரோ பதிவாளர் அலுவலகம் சென்றுள்ளார். அதைப் பயன்படுத்தி சந்தேநபர் நீதிமன்றின் பின்புறமாக உள்ள கீழ் தளத்துக்குள் பாய்ந்து வளாகத்தின் பின்புற வாசல் ஊடாகத் தப்பிச் சென்றுள்ளனர்.
வளாகத்தின் பின்பகுதியில் பொலிஸ் அலுவலரோ பாதுகாப்பு அலுவலரோ பாதுகாப்புக் கடமையில் இல்லாத நிலையில் சந்தேகநபர் அந்த வழியாகத் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-37)

## தரம் 5...

கவும் ஆண்டுதோறும் தரம் 5 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது.
இந்தப் பரீட்சையால் சிறுவர்கள் மனதளவில் பாதிக்கப்படுகின்றனர் என்றும், அவர்கள் மீது எல்லைமீறிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்றும் கல்வியியலாளர்களும், உளவியல் நிபுணர்களும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர்.
அதனால் புலமைப் பரிசில் பரீட்சையைத் தடை செய்ய வேண்டும் என்றும் பல தரப்புக்களிடம் இருந்து கோரிக்கைகளும் விடுக்கப்பட்டிருந்தன.
அதையடுத்தே தற்போது சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் உள்ள சிறார்களைத் தவிர ஏனையோருக்கு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் கட்டாயம் இல்லை என்பதுடன் அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கக் கூடாது என வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்தச் சுற்றறிக்கை ஊடாகப் பெற்றோர்களின் ஒப்புதலுடன் அந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதா? இல்லையா என்பது தொடர்பாக மாணவர்கள் முடிவெடுக்க முடியும்.
அத்துடன் தரம் 5 வரை ஆரம்பப் பாடசாலையில் கற்கும் மாணவர் ஒருவர் புலமைப் பரிசில் பரீட்சை எழுதாவிட்டாலும், அந்த மாணவருக்கு வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்காகச் சுவரொட்டிகள், பதாகைகள் ஒட்டுவதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் மனதளவில் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டே இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இவற்றுடன் பாடசாலைகளில் தரம் 6க்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது சுற்றறிக்கை விதிமுறைகளின்படி வசதிகள் மற்றும் சேவைக் கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கட்டணம் என்பவற்றுக்குப் பதிலாக வேறு ஏதும் வகையில் மாணவர்களிடம் இருந்து கட்டணங்கள் அறவிடுவது, நன்கொடைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தால் நியமிக்கப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின்படி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஏமாற்றி...

கொண்டு செல்லப்பட்டுள்ளார். மருத்துவச் செலவுக்கு பணம் தர வேண்டும் என்று அங்கு நின்ற ஒருவர் கேட்டுள்ளார். மகன் விபத்தில் சிக்கினார் என்ற பதற்றத்தில் பணம் இல்லையெனக் கூறி கழுத்தில் அணிந்திருந்த 3 பவுண் தங்கச் சங்கிலியை கழற்றிக் கொடுத்துள்ளார். சங்கிலியை வாங்கியவர் அவசரமாக அங்கிருந்து சென்றுள்ளார். சிறிதுநேரத்தில் அங்கு வந்த மகன் சம்பவத்தை அறிந்து அம்பாளுக்கு நேர்த்தி வைத்துச் சென்றுள்ளார்
பங்குனித் திங்கள் நான்காம் திங்களான நேற்று மூதாட்டியும் மகனும் கோவிலுக்கு வந்து வழிபட்டுக் கொண்டிருந்த வேளையில் சங்கிலியை வாங்கிய நபர் அங்கு நின்றுள்ளார். அவரை அடையாளம் கண்டு கொண்ட மூதாட்டி மகனிடம் கூறியுள்ளார். மகன் அந்த நபரைப் பிடித்து அங்குள்ள பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். பொலிஸாரின் விசாரணையில் மூதாட்டியிடம் சங்கிலியை வாங்கியதை அந்த நபர் ஒப்புக் கொண்டார் என்றும், அதையடுத்துப் பொலிஸார் அந்த நபரைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-9,131)

## முல்லையில்...

லாறு வடக்கில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். சம்பவத்தில் வெட்டிக் கொல்லப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தாயாரான ஜெயா என்று அழைக்கப்படும் வி காந்தரூபி (வயது-44) என அடையாளம் காணப்பட்டார். கணவன் - மனைவிக்கு இடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தில் கணவன், மனைவியை கத்தியால் கழுத்தில் வெட்டிக்கொன்றார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.
கொல்லப்பட்டவரின் கணவரைச் சம்பவத்தின் பின்னர் காணவில்லை. அவர் தலைமறைவாகி உள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று தெரிவித்த பொலிஸார் அவர் தொடர்பான விவரங்களை பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தனர்.
சந்தேக நபரான கணவரைத் தேடி தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று எனினும் நேற்று மாலை வரை சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21)

## சர்வாதிகார...

இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேன.
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் யாரை வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும், மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியினருக்கு இடையேயும் முரண்பாடுகள் அண்மைக்காலமாக ஏற்பட்டிருந்தன. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் மீண்டும் களமிறங்குவதற்கு மைத்திரி சிறிசேன திட்டமிட்டுள்ளார் என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் மகிந்த ராஜபக்ச தரப்பினரோ ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே வேட்பாளராக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.
இந்தப் பின்னணியிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார். "அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் சிறி லங்கா பொதுஜன முன்னணிக்கும் (மஹிந்த அணி) இடையில் இழுபறி தொடர்கின்றன என்று செய்திகள் வருகின்றன. இது தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்ன?' என்று சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் அரச தலைவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரச தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் சிறி லங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் பேச்சு நடைபெற்றது. எனினும் இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை. இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்பதற்காக இழுபறி தொடர்கின்றது எனக் கூற முடியாது. சிலவேளை பேச்சுத் தொடரக்கூடும்.
உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவை நாம் எடுப்போம். அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் இதுவரை எந்தக் கட்சியும் முடிவெடுக்கவில்லை. எனவே, இந்த விடயத்தில் நாம் அவசரப்பட்டு முடிவு எடுக்கக்கூடாது.
இலங்கையில் மீண்டும் சர்வாதிகார ஆட்சிக்கு இங்குள்ள மக்கள் இனிமேல் இடமளிக்க மாட்டார்கள். நாமும் அதற்கு இடமளிக்க மாட்டோம். மூவின மக்களும் நிம்மதியாக நல்லிணக்கத்துடன் வாழும் ஆட்சியே தொடர வேண்டும். இதுவே எமது விருப்பம்.
நான்தான் தற்போது சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் அரச தலைவராகவும் பதவி வகிக்கின்றேன். எமது கட்சியின் அடுத்த அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் நானே இறுதி முடிவெடுப்பேன். எமது கட்சி வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது குறித்தும் நானே இறுதித் தீர்மானம் எடுப்பேன் - என்றார். (எ-22)

# ஏமனில் தாக்குதல் நடத்தியது சவூதி

## 13 பேர் பரிதாபச் சாவு





சனா,ஏப்.9
ஏமனில் பாடசாலை ஒன்றுக்கு அருகே சவூதி அரேபியாவின் கூட்டுப் படைகள் நடத்திய வான் வழித் தாக்குதலில் 13 பேர் சாவடைந்தனர். இதில் 7பேர் குழந்தைகள்.

100க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். ஏமனின் தலைநகரான சனாவில் உள்ள அல் ரேய் என்கிற பாடசாலைக்கு அருகிலேயே இந்தத் தாக்குதல் நிகழ்ந்தது.

இதில் சாவடைந்தவர்களில் 7 பேர் குழந்தைகள். பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலால் பாடசாலைக் கட்டங்களும் பாதிக்கப்பட்டன.

ஹவுத்திப் போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான குறித்த இடத்தில் ஏமன் அரசும் சவூதிப் படைகளும் இணைந்து இந்தத் தாக்குதலை நடத்தின. தலைநகர் சனா. 2014ஆம் ஆண்டிலிருந்து ஹவுத்திப் போராளிகளின் வசம் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

தென் மேற்கு ஆசிய. அரேபிய வளைகுடா நாடான ஏமனில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கு இடையே 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி அரேபியா செயற்படுகிறது.

ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஏமன் அரசுடன் இணைந்து சவூதி நடத்தும் மனிதாபிமானமற்ற தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துவருகிறது.



## 2000 ஆண்டுகள் பழமையான மம்மி எலிகள் கண்டுபிடிப்பு

கொய்ரோ,ஏப்.9
சுமார் 2ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பதப்படுத்தப்பட்ட (மம்மி) எலிகள், வேறு சில விலங்குகள் மற்றும் இரண்டு மனிதர்களின் உடல்கள் என்பன எகிப்திலுள்ள சஹோகே என்னும் நகரத்தில் புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரண்டு மனித மம்மிகளின் உடலைச் சுற்றி எலிகள் உட்படச் சில விலங்குகளின் பதப்படுத்தப்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப் புதை படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை புதைக்கப்பட்டுள்ள அறையிலுள்ள சுவர் முழுதும் இறுதிச் சடங்குகள் குறித்த ஓவியங்கள் உள்ளன. சுமார் 2ஆயிரம் ஆண்டுகள் பழமையான கல்லறையான இது. முற்காலத்தில் எகிப்தின் உயரதிகாரியாக இருந்த டுட்டு என்பவரும் அவரது மனைவியும் ஓய்வெடுக்கும் பகுதியாக விளங்கியதாக தொல்லியலாளர்கள் தெரிவிக்கின்றனர். எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலிருந்து சுமார் 390 கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள பாலைவனப் பகுதியான இது. இனிச் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் நாட்டின் மற்றொரு பகுதியாக உருவெடுக்கும் என்று அந்த நாட்டின் தொல்லியல் துறையினர் தெரிவிக்கின்றனர்.



ஹவாய்த் தீவில் கபோஹோ எனும் பகுதியிலுள்ள எரிமலை வெடித்த போது, தனது வீட்டை விட்டு வெளியேறிய 64 வயதான இந்தப் பெண்மணி, எரிமலைச் சீற்றம் தணிந்த பின்பு தனது வதிவிடத்தைச் சென்று பார்த்தார். அவர் வசித்த இடம் முழுதும் எரிமலைக்குழம்பு படிந்து, இறுகிப் பாறையாகிவிட்டது. தன்னுடைய வசிப்பிடப் பகுதியைக் கண்டறிந்த அவர் அதற்கு ஆதாரமாக அந்த இடத்தில் தென்னை மரங்களை நடுகிறார்.



## அமெ. பாதுகாப்பு அதிகாரி திடீர்ப் பதவி விலகல்

வோஷிங்டன்,ஏப்.9
அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முன்னெடுத்து வருகின்ற எல்லைச் சுவர் அமைப்பதற்கான நடவடிக்கைகள், அந்த எல்லையூடாக வருபவர்களை ஒழுங்கமைத்தல் போன்ற விவகாரங்களைக் கையாண்டவர் கிரிஸ்ஜென் நைல்சன். அமெரிக்காவின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரியாக இருக்கின்ற இவர் நேற்றுத் திடீரெனப் பதவி விலகினார். ட்ரம்ப் உடன் பணியாற்றுவது மிகக் கடினமான விடயம் என்று குறிப்பிட்டிருக்கின்ற இவர், 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இருந்து இந்தப் பதவியை வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவிடமுள்ள இராணுவத்தை பயங்கரவாத அமைப்பாக அறிவிப்போம்

### ஈரான் தெரிவிப்பு



தெஹ்ரான்,ஏப்.9
இஸ்லாமியப் புரட்சிகர இராணுவப் படையை பயங்கரவாதிகள் என அமெரிக்கா அறிவித்தால் பதிலடியாக அமெரிக்க இராணுவத்தைப் பயங்கரவாத அமைப்பாக நாங்களும் அறிவிப்போம் என ஈரான் எச்சரித்துள்ளது. ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர இராணுவப் படையை பயங்கரவாத இயக்கமாக அறிவிப்பதற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட்ட்ரம்ப்தீர்மானித்துள்ளதாக மேலைத்தேச ஊடகங்கள் சிலவற்றில் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையிலேயே ஈரான் இவ்வாறு தெரிவித்தது. இஸ்தான்புல் நகரில் செய்தியாளர்களுடன் நடந்த சந்திப்பில் ஈரான் நாடாளுமன்றத்தின் தேசியப் பாதுகாப்புத்துறைத் தலைவரான ஹெஷ்மட் டொல்லாஹ் வ்பலாஹட் பிஷே என்பவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

**பின்னணி**

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிகொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. தனது நேசநாடுகளும் ஈரானைப் புறக்கணிக்க வேண்டும் என நிர்பந்திக்கிறது. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் முடிவால் உலகளாவிய அளவில் தங்கள் நாட்டின் மீதான நன்மதிப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக ஈரான் அதிபர் தெரிவிக்கிறார். அமைதியான முறையில் ஆக்கபூர்வமான தேவைகளுக்கு யூரேனியத்தைச் செறிவூட்டும் உரிமை ஈரானுக்கு உள்ளதாகத் தெரிவித்த ஈரான் அதிபர், அமெரிக்காவின் அழுத்தத்துக்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம். எங்கள் நாட்டின் சுதந்திரத்தையும், இஸ்லாமிய நன்முறைகளையும் பாதுக்காக்க ஒருநாளும் தவற மாட்டோம்" எனக் குறிப்பிட்டார். இந்த விவகாரத்தைத் தொடர்ந்து. அமெரிக்கா - ஈரானிடையே முரண்போக்கு உருவாகியுள்ளது.

# பெரியார் சிலை உடைப்பு

## குற்றவாளிகளைக் கைது செய்யக்கோரிப் போராட்டம்

அறந்தாங்கி,ஏப்.9

**புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பெரியார் சிலை உடைக்கப்பட்டுள்ளது. இதில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யக்கோரி வீதி மறியல் போராட்டம் நடந்தது**

.புதுக்கோட்டைமாவட்டம்அறந்தாங்கி அரசமருத்துவமனைக்கு அருகேஅழி யாநிலைப் பிரிவு வீதிப் பகுதியில் 1998ஆம்ஆண்டில்பெரியாருக்குமுழு உருவச் சிலை அமைக்கப்பட்டது. அதைத்திராவிடர்கழகத்தின்தலைவர் வீரமணிதிறந்துவைத்தார். இந்தநிலை யில் இந்தச்சிலையின் தலையை நேற் றுமுன்தினம்இரவுஇனம்தெரியாதவர் கள்உடைத்துச்சேதப்படுத்திஉள்ளனர். இதைக்கண்டித்துப்பலர்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. ஏராளமான பொலி ஸார் சிலையைச் சுற்றிப் பாதுகாப்புப் பணியில்ஈடுபட்டுள்ளனர். இந்தச்சிலை யைச் சேதப்படுத்தியவர்களைக் கைது செய்ய வேண்டும். கைது செய்யும்



வரைபோராட்டத்தைக் கைவிடப்போவ தில்லை என்றனர் போராட்டக்காரர்.

சந்தேகத்தின்பேரில்சிலரை அறந்தாங் கிப் பொலிஸார் பிடித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும், மாவட் டத்தின் பிற பகுதிகளில் உள்ள பெரியார் சிலைகளையும் கண்காணிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இந்தச் செயலுக்குஅரசியல் தலைவர் கள் உட்படப் பலர் தமது கண்டனங் களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே புதுக்கோட்டைவிடுதியில் இருந்த பெரியார் சிலை கடந்த ஆண்டு இதே மாதத்தில் உடைத்துச் சேதப்படுத் தப்பட்டது. இதேபோன்று தொடர்ச்சி யாக பல்வேறு இடங்களில் பெரியார் சிலைக்கு அவமரியாதை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## சபரிமலைபற்றிவிரிவாகஎடுத்துரைப்போம் பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு



புதுடெல்லி,ஏப்.9

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் அவருடைய கட்சியானபா.ஜ.காவின்பிறதலை வர்களும் இணைந்து நேற்று டெல்லியில்பா.ஜ.காவின்தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர்.

அதில் சபரிமலை தொடர்புடைய நம்பிக்கை, மரபு, வழிபாடு ஆகிய வற்றைவிரிவாகஉச்சநீதிமன்றத் தின்முன்எடுத்துரைப்பதைஉறுதி செய்வதற்காக எல்லா முயற்சிக ளும் எடுக்கப்படும்.

நம்பிக்கை தொடர்புடைய பிரச்சி னைகளில் அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புவழங்கப்பாடுபடுவோம் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

**சபரிமலை விவகாரம்**

அனைத்து வயதுப்பெண்களும் சபரிமலைக்குச் சொல்லலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து கடந்த 3மாத காலமாகக் கேரள மாநிலம்முழுவதும்இந்துஅமைப் புகள், பா.ஜ.காவினர் போராட்டம் நடத்தினர். பிந்து, கனகதுர்கா ஆகிய இரண்டு பெண்கள் சபரிம லைக்குப்பொலிஸ்பாதுகாப்புடன் சென்று ஐயப்பனைத் தரிசனம் செய்தனர். இந்த விடயம் பரப ரப்பை ஏற்படுத்தியது. பா.ஜ.க, காங்கிரஸ் கட்சிகள் போராட்டம் நடத்தின. கேரள அரசைக் கண் -டித்து நடந்த முழு அடைப்புப் போராட்டத்தில் வன்முறைச் சம்ப வங்கள்நடந்தன. சபரிமலையில் மண்டல பூஜை மற்றும் மகர விளக்குதரிசனகாலம்வரை இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

## ஈழத்தில் ஏற்பட்டது போல் தமிழகத்தில் ஏற்படும்

### சீமான் தெரிவிப்பு

தமிழ்நாடு. ஏப்.9

தமிழர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் ஈழத்தில் ஏற்பட் டதுபோல்தமிழகத்தில்ஏற்படும். சொந்தநிலத் தில்அடிமைகளாகவாழவேண்டியசூழ்நிலை தமிழர்களுக்கு ஏற்படும் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரி வித்தார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி இந் திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேரளாவில் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந் தால் மட்டுமே குடியுரிமை வழங்கப்படும். ஆனால் தமிழகத்தில் ஒரே மாதத்தில் குடியுரிமை பெற்றுவிடலாம். இது ஒரு பேரா பத்தான போக்கு. திட்டமிட்டு வெளி மாநிலத்த வர்களைக் குடியமர்த்தப்படுகின்றனர்.

தமிழர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் ஈழத்தில் ஏற்பட் டதுபோல்தமிழகத்தில்ஏற்படும். சொந்தநிலத் தில்அடிமைகளாகவாழவேண்டியசூழ்நிலை



## மீண்டும் தலைமை அமைச்சரானால்

# மேற்கிலுள்ள யூதக் குடியேற்றத்தை இஸ்ரேலுடன் இணைப்பேன்

### பெஞ்சமின் நெதன்யாகு வாக்குறுதி

ஜெருசலம்,ஏப்.9

தான் மீண்டும் இஸ்ரேலின் தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு பேங்க் பகுதியிலுள்ள யூதக் குடியேற்றங்கள் இஸ் ரேலுடன் இணைக்கப்படும் என்று அந்த நாட்டின் தலைமை அமைச்சர் பெஞ் சமின் நெதன்யாகு தெரிவித்தார். பெஞ்சமின் நெதன்யாகுவின் பதவிக்காலம் முடிவடைய உள்ளதால், இஸ்ரேலில் தலைமை அமைச்சரை தெரிவு செய்வ தற்கான தேர்தல் நடக்கவுள்ளது. இந்த நிலையிலேயே தலைமை அமைச்சர் நெதன்யாகு இவ்வாறு தெரிவித்தார். மேற்கு பேங்க் பகுதியிலுள்ள குடியேற்றங்களில் சுமார் நான்கு இலட்சம் யூதர்களும், 25 இலட்சம் பாலஸ்தீ னியர்களும் வசித்து வருகின்றனர். பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் இந்தக் குடி யேற்றங்கள் சட்டவிரோதமானவையாக இருந்தபோதிலும், இஸ்ரேல் அந்தப் பகுதியைத் தன்னுடன் இணைக்கும் நோக்குடன் செயற்படுகிறது. இது பன் னாட்டுச் சட்டதிட்டங்களுக்கு முரணானது என்பது குறிப்பிடத்தக்கது.





## இன்றைய நாள்



**மேடம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடு படுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனையில் நல்ல வளர்ச்சி உண்டா கும். பணவரவும், நன்மையும் அதி கரிக்கும். பெண்கள் புத்தாடை, அணி கலன் வாங்குவர்.



**இடபம்:** அடுத்தவர் பிரச்னையில் கருத்து சொல்ல வேண்டாம். தொழிலில்உருவாகிற இடையூறுகளை உடனடியாக சரிசெய்யவும். மாண வர்கள் பாதுகாப்பு குறைவான இடங்க ளில் செல்ல வேண்டாம்.



**மிதுனம்:** இயற்கை அழகை ரசித்து மகிழ்வீர்கள். வாழ்வை மேம்படுத்த அக்கறையுடன் பணிபுரிவீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.



**கடகம்:** ஆன்மிக சிந்தனையுடன் பணிபுரிவீர்கள். இஷ்ட தெய்வ அருளால் நன்மை வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். அதிக பணவரவால் சொத்து வாங்குவீர்கள்.



**சிம்மம்:** சிலரது பேச்சு மனதிற்கு கஷ்டம் தரலாம். நற்பெயரை பாது காத்துக் கொள்ளவும். தொழிலில் உற்பத்தி விற்பனை சீராக இருக்கும். மிதமான பணவரவு கிடைக்கும்.



**கன்னி:** பணிகள் நிறைவேறுவதில் தாமதம் ஆகலாம். உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.



**துலாம்:** லட்சியம் நிறைவேற திட்ட மிட்டு செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரியாக பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவர்.



**விருச்சிகம்:** மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை செழித்து வளரும். லாபம் பன்மடங்கு உயரும்.



**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம்பொது விஷயம் பேசக் கூடாது. எதிலும் முன் யோசனை அவசியம். தொழிலில் அளவான உற்பத்திவிற்பனை இருக்கும். அதிகநிபந்தனையுடன்பணம்கடன்பெற



**மகரம்:** நண்பரிடம் மனம் விட்டுப் பழகுவீர்கள். தொழில் வியாபாரம் திட்டமிட்ட இலக்கை அடைய அவகாசம் தேவைப்படும். சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும்.



**கும்பம்:** சவால்களை ஏற்று செயல்படுகிற எண்ணம் வளரும். தொழில் வியாபா ரத்தில் நிலுவைப்பணி கூடுதல் உழைப் பால் நிறைவேறும்.



**மீனம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாரான அளவில் இருக்கும். லாபம் சுமார். பணியாளர்கள் நிர்வா கத்தினரின் ஆதரவு கிடைக்கப் பெறுவர்.

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 9

**வளர்மதி ச.ச.நி தாச்சித் தொடர்**

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி ஏ அணியை எதிர்த்து நாவலர் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலட்டி பாரதி பி அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதவுள்ளது.

**இந்து இளைஞரின் கரப்பந்துத் தொடர்**

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வியங்காடு நோதன் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**செந்தமிழ் கழக கால்பந்தாட்டம்**

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் புதுகுடியிருப்பு சுப்பர்றாங் அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் வளர்மதி அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை அணி மோதவுள்ளது. (ம-23)



# யங்ஹென்றிஸ் அணி கிண்ணம் வென்றது!

யாழ்ப்பாணம், ஏப். 9

தனேசின் சிறப்பான கோல் பதிவின்மூலம் ஆனைக்கோட்டை யூனியன் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது இளவாலை யங்ஹென்றிஸ்.

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது யங்ஹென்றிஸ்.

யங்ஹென்றிஸின் சார்பில் தனேஸ் 3 கோல்களையும், ஞானரூபன் 2 கோல்களையும் பதிவுசெய்தனர். ஆனைக்கோட்டை யூனியன் அணியின் கோலை மதி பதிவுசெய்தார். (ம-23)

## ஆலடி சிந்து அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 9

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தில் 60ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆலடி சிந்து அணி வெற்றிபெற்றது.


வளர்மதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி அணியை எதிர்த்து சிந்து அணி மோதியது. 6:3 என்ற கோல் கணக்கில் சிந்து அணி வெற்றிபெற்றது. (ம)

## கால்பந்தாட்டத்தில் ஐக்கியம் வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 9

வலிகாமம் லீக்கின் ஆதரவுடன் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் நடத்தும் முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 9 வீரர்கள் பற்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஐக்கியம் அணி வெற்றி பெற்றது.

ஐக்கியம் அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் ஐக்கியம் அணி வென்றது. (ம-23)



## பிரதேச செயலகங்களின் கூடைப்பந்து; நல்லூர் பிரதேச செயலகம் சம்பியன்!



யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கூடைப்ப ந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேசசெயலக அணி கிண்ணம் வென்றது.

பழைய பூங்கா வளாகத்தில் அமைத்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது. 70:68 என்றபுள்ளிக ளின் அடிப்படையில நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (ம-23)

## யாழ்ப்பாணம் செயலகம் கூடைப்பந்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது. 67:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேசசெயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## கண்ணகி வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 9

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கண்ணகி அணி வெற்றிபெற்றது.

வளர்மதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கைதடி குமரநகர் ஏ அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி அணி மோதியது. 7:5 என்ற கோல் கணக்கில் கண்ணகி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கோக்லிக்கு ஓய்வு கொடுங்கள்

## வாகன் தெரிவிப்பு

மே மாதம் ஆரம்பமாகும் உலகக் கிண்ணப் போட்டிக்கு இப்போதே கோக்லிக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கெட் வீரர் மைக்கேல் வாகன் தெரிவித்துள்ளார்.

12ஆவது ஐ.பி.எல். தொடர் ஆம்பமாகி இதுவரையான போட்டிகளில் பெங்களூர் அணி ஒரு போட்டியில்கூட வெற்றி பெறவில்லை. அவர்கள் ஆடிய 6 போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்தனர்.

கோக்லியின் துடுப்பாட்டம் பன்னாட்டு கிரிக்கெட்டில் அவரது தரநிலைக்கு தகுந்த அளவில் இல்லாதது பலவீனமாக மாறியுள்ளது. பெங்களூர் அணியின் தொடர் தோல்விகள் கோக்லியின் தன்னம்பிக்கையைப் பாதிக்கலாம். இந்தப் பாதிப்பு உலகக் கிண்ணத்தில் இந்திய அணியின் ஆட்டத்தில் எதிரொலிக்க வாய்ப்புகள் உள்ளன என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இங்கிலாந்து முன்னாள் கிரிக்கெட் வீரரும். வர்ணனையாளருமான மைக்கேல் வாகன் தெரிவிக்கையில்;

இந்தியா சமயோசிதமாக திட்டமிட்டு. ஆரம்பமாகவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டிக்கு கோக்லிக்கு இப்போதே ஓய்வு கொடுக்க வேண்டும். உலகக் கிண்ணப் போட்டி என்பது பெரிய போட்டி என்பதால் அதற்கு முன்பாக, அவருக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்- என்றார்.






# கொல்கத்தா இலகு வெற்றி



12ஆவது ஐ.பி.எல். போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியொன்றில் கொல்கத்தா - ராஜஸ்தான் அணிகள் மோதிய ஆட்டத்தின் கொல்கத்தா அணி 8 இலக்குகளால் இலகு வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி முதலில் ராஜஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ராஜஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரஹானே, பட்லர் களமிறங்கினர். அணி 5 ஓட்டங்களைப் பெற்ற போது ரஹானே 5 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். அதிகபட்சமாக சிமித் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களைப் பெற்றார். பட்லர் 37 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. கொல்கத்தா அணியின் பந்து வீச்சாளர்கள் அதிகம் ஆதிக்கம் செலுத்தியிருந்தனர். பந்து வீச்சில் குர்னே 2 இலக்குகளையும், கிருஷ்ணா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இலகு இலக்கு இலக்கை நோக்கிக் களமிறங்கிய கொல்கத்தா அணியின் 13.5 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. கொல்கத்தா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் கிறிஸ்ற லின், சுனில் நரைன் சிறப்பான அடித்தளத்தை இட்டனர். இருவருக்குமான இணைப்பாட்டமாக 91 ஓட்டங்கள் பகிரப்பட்டன. கிறிஸ்ற லின் 50 ஓட்டங்களையும், சுனில் நரைன் 47 ஓட்டங்களையும் பெற்றனர். உத்தப்பா ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களைப் பெற்றார்.



# அணித் தலைவரில் கோக்லி அப்ரன்டிஸ்

## கம்பீர் மீண்டும் கிண்டல்

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் நடைபெற்ற முடிவடைந்த போட்டிகளில் இதுவரை பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி எந்தவொரு போட்டியிலும் வெற்றி பெறவில்லை. ஐ.பி.எல். போட்டி தொடங்க முன்னரே கம்பீர் கோக்லியை வசைபாடியிருந்தார். டோனி, ரோகித் தலா மூன்று ஐ.பி.எல் கிண்ணங்களையாவது வென்றுள்ளனர். ஆனால் கோக்லி இதுவரை ஒரு கிண்ணத்தைக்கூட வெல்லவில்லை. பெங்களூர் அணி அவரை இன்னமும் அணித்தலைவர் பொறுப்பில் வைத்திருப்பதற்கு கோக்லி அவர்களுக்கு நன்றி கூற வேண்டும் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தது. இந்த வகையில் அவர் திரும்பவும் கோக்லியைத் தாக்கியுள்ளார்.

அவர் குறிப்பிடுகையில்;

துடுப்பாட்டத்தில் கோக்லி சிறந்த வீரர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் அணித் தலைவர் பதவியில் அவர் அப்ரன்டிஸ். அவர் இன்னும் ஏராளமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். பந்து வீச்சாளர்கள் மீது சாடுவதை விட்டுவிட்டு, தோல்விக்குக் காரணத்தை அவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவர்கள் எங்கே சறுக்கினார்கள் என்பது நான் எடுத்துக் கூறகிறேன். தொடர் தொடங்கும்போது மார்கஸ் ஸ்டாய்னிஸ் மற்றும் நாதன் கவுல்டர்நைல் ஆகியோரால் விளையாட முடியாது என்பது தெரிந்தும், ஏன் அவர்களை தேர்வு செய்தார்கள்.


சின்னச்சாமி மைதானத்தில் வேகப்பந்து வீச்சாளர்களுடன் முழுப் பலத்துடன் களம் இறங்க வேண்டும். கொல்கத்தாவுக்கு எதிராக சிராஜ் பந்து வீச முடியாத நிலையில், அவருக்குப் பதிலாக மார்கஸ் ஸ்டாய்னிஸை பந்து வீச கோக்லி அழைத்தார். அதற்குப் பதிலாக பவன் நெஹியை பந்து வீச அழைத்திருக்க வேண்டும். ரசல் வேகப்பந்து வீச்சை துவம்சம் செய்வார் என்பதை தெரிந்து கொள்ள பெரிய மூளை தேவையில்லை- என்றார்.

# நொண்டிச் சாக்கு சொல்ல முடியாது

## கோக்லி மனவருத்தம்

ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் - டெல்லி அணிகள் மோதிய ஆட்டத்தில் பெங்களூர் அணி தோல்வியடைந்து தனது ஆறாவது தோல்வியைச் சந்தித்தது. இந்த ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணி இடம்பெற்ற எந்தவொரு போட்டிகளிலும் வெற்றி பெறவில்லை என்பது துரதிர்ஷ்டமானது. இது குறித்து அணித் தலைவர் கோக்லி மிகுந்த மனவருத்தத்துடன் தெரிவித்ததாவது;

இந்த ஆட்டத்தில் நாங்கள் சிறப்பாக விளையாடவில்லை என்பதே உண்மையாகும். ஒவ்வொரு போட்டியிலும் தோல்வி அடைந்துவிட்டு அதற்கான காரணம் தேடுவதும், அத்னை பேசுவதும் முறையானது அல்ல. நாள்தோறும் தோல்விக்கு நொண்டி சாக்கு சொல்ல முடியாது. நாங்கள் சரியாக விளையாடதே தோல்விக்கு காரணம்- என்றார்.



# லவன்டே- ஹஸ்கே ஆட்டம் சமநிலையில்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்று சமநிலையில் முடிவடைந்தது.

லவன்டே- ஹஸ்கே அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் லவன்டே வீரர் மார்ரி ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் 1:0 என்ற கணக்கில் லவன்டே அணி முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 63ஆவது நிமிடத்தில் ஹஸ்கே அணி வீரர் கலியோ ஒரு கோலைப் போட்டார். அடுத்த 2ஆவது நிமித்தில் லவன்டே அணிக்கு ஒரு பெனால்டி வாய்ப்பு கிடைக்க அந்த அணியின் வீரர் நொகாலஸ் அதைக் கோலாக மாற்ற அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையானது. ஆட்டம் விறுவிறுப்பான போது 69ஆவது நிமிடத்தில் ஹஸ்கே அணி வீரர் அவில்லா சிறப்பான ஒரு கோலைப் போட்டார். அதன் பின்னர் ஆட்டத்தின் இறுதி நிமிடங்கள் வரையிலும் இரு அணி வீரர்களும் கடுமையாகப் போராடிய போதிலும் எந்தவொரு கோல்களும் பெறப்படாத நிலையில் ஆட்டம் 2:2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

தரம் 6 - 9
பாடசாலை மாணவர்களுக்கான
தேசிய
பாடவிதானத்திற்கு அமைவான
ICT பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்

A1 வார நாட்கள் புதிய பிரிவுகள் ஆரம்பம் APRIL 18 THURSDAY
A2 வார இறுதி நாட்கள் புதிய பிரிவுகள் ஆரம்பம் APRIL 20 SATURDAY



MEDIUM : ENGLISH | TAMIL

எமது இலக்கு
- மாணவர்களைத் தேசிய பாடத்திட்டத்திற்கமைய வழி நடாத்தி அவர்களின் சிறந்த பெறுபேற்றினை உறுதிப்படுத்தல்.
- உயர் கல்விக்கு ஏதுவாக திறமைகளை விருத்தி செய்தல்.

ஏன் குழு வகுப்புக்களை ESOFT இல் தொடர வேண்டும்?
- தகவல் தொழில்நுட்பக் கல்வித்துறையில் 19 வருட அனுபவம் கொண்ட நாட்டின் முன்னணி உயர் கல்வி நிறுவனம்.
- நவீன வசதிகள் கொண்ட வகுப்பறைகள்.
- அதி நவீன கணினிகள் கொண்ட ஆய்வுகூட வசதி.
- செயன்முறைப் பயிற்சி விளக்கங்களுடன் கூடிய கல்வி.

மேலதிக விபரங்களுக்கு 0767956498

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna | Hotline : 021-7 572 572
www.esoft.lk
SRI LANKA'S LARGEST PRIVATE SECTOR HIGHER EDUCATION NETWORK


# ரியல் பெட்டிஸ் திரில் வெற்றி

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் ரியல் பெட்டிஸ் அணி 2:1 என்ற கணக்கில் திரில் வெற்றி பெற்றது.

ரியல் பெட்டிஸ் - வில்லாரியல் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் ரியல் பெட்டிஸ் அணி வீரர் செல்சோ ஒரு கோலைப் போட்டார். அடுத்த இரண்டாவது நிமித்தில் பதிலுக்கு வில்லாரியல் அணி வீரர் மோரி ஒரு கோலைப் போட் முதல் பாதி ஆட்டம் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது. இரு அணி வீரர்களுக்கும் இன்னொரு கோலைப் போடுவதே இலக்காக இருந்தது. மிகவும் ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 63ஆவது நிமிடத்தில் ரியல் பெட்டிஸ் அணி வீரர் செல்சோ மீளவும் ஒரு கோலைப் போட ரியல் பெட்டிஸ் அணி 2:1 என்ற கணக்கில் திரில் வெற்றி பெற்றது.


மருந்தாளர் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள
மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை.
(CS 246022) (04.17)
076 091 6661/076 979 3140

சுத்திகரிப்பு பணியாளர் தேவை
அலுவலகங்களுக்கும்.
திருமணமண்டபங்களுக்கும் சுத்திகரிப்பு
பணியை மேற்கொள்வதற்கு 21 -35
வயதிற்கு உட்பட்ட ஆண். பெண்
இருபாலாரும் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:
(CS 245932)(04.17)
076 697 6227/077 497 5962

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் DELF A1
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம்
0779 789 456
021 221 7781
ஆரம்பம் : 06.04.2019 சனி மதியம் 12 மணி.
ஏனைய நிறுவனங்களில் கற்றோரும் இணையலாம்.

போட்டிப் பரீட்சை
மாலை நேர
வகுப்புக்கள்
பொது உளச்சார்பு
மொழித்திறன்
பொது அறிவு
செவ்வாய். புதன்.
வியாழன்
பி.ப 4.45→6.45
076 688 3394,
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி,
கொமர்ஷல் வங்கியருகில்)



புத்தாண்டுக்கு Ready!
SAMSUNG



Galaxy A50 | A30 | A20 | A10
The coolest new action phones
Infinity-U Display* | 123° Ultra Wide Video* | 4000 mAh Battery* | Fast Charging*
DAMRO | JKOA | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog | Telecom | daraz | WOW
"Youth Brand of the year 2018 & 2019"
SIMPLY DIAL 011 SAMSUNG 7267864
SamsungLankaOfficial
SamsungLankaOfficial


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.